
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 12

ஆகஸ்ட் -1999

இதழ் - 8



"ஆதியிலே தேவன் வானத்தையும்,
பூமியையும் சிருஷ்டித்தார்." ஆதி. 1:1

*வெளியிடுவோர்*

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701**

**தமிழ்நாடு, இந்தியா.**

## அரிய வாய்ப்பு

திருமறை ஆசான் மாத இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. E.Z. **செல்வநாயகம்** அவர்கள் பல்வேறு தலைப்புகளின் கீழாக எளிய நடையில் எழுதி, அநேகர் பயன் பெற்ற 40க்கும் அதிகமான கட்டுரைகளைத் தொகுத்து **"ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்"** என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.

தரமான தாளில் அச்சிடப்பட்டு, நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகிய தோற்றமுடையதாய் வடிவமைக்கப்பட்டுள்ள **இந்நூல் சுமார் 250 பக்கங்களைக் கொண்டது.**

சத்தியம் விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக்கூடியது. தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 25/- மாத்திரமே.

முகவரி : **தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27, காங்கயம் - 638 701.

குறிப்பு : தயவு செய்து M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.

## ஆசானின் அறிவுரையிலே...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நாலுபேரைப் பாருங்கள் | 1 |
| 2. | சபையின் ஆளுகை அமைப்பு | 11 |
| 3. | பெண்கள் பகுதி | 16 |
| 4. | தெரிந்து கொள்ளுங்கள் | 19 |
| 5. | வெளிப்படுத்தின விசேஷம் | 22 |
| 6. | வாலிபர் பகுதி | 27 |
| 7. | யெரொபெயாமின் பாவம் | 31 |

# THIRUMARAI AASAAN

**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C. CHOATE**

**Published by Church of Christ**
Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol.12** **AUGUST - 1999** **Issue - 8**

*ஆசிரியவுரை*

# "நாலு பேரைப் பாருங்கள்"

**க**டந்த நான்கைந்து ஆண்டுகளாக, ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதங்களில் அடியேன் ஒரு பணியை ஆர்வத்தோடும், அக்கறையோடும் செய்து வருகிறேன் என்பது, நமது ஆசானை ஆழ்ந்து படிக்கும் அனைவருக்கும் அவசியம் தெரியும். ஆம், பழைய, புதிய ஏற்பாடுகளின் பக்கங்களின், மாசுபடிந்த மாணிக்கங்களாய், மங்கி மறைந்திருக்கும் மா மனிதர்களை இனம் கண்டு, அவர்தம் மாசு நீக்கி, பளிச்சென மின்னிடுமளவு ஒளியேற்றி வாசகர்களாகிய உங்களுக்கு சிறப்பாக அறிமுகம் செய்து, அவர்களைக் கொண்டு நமது ஆன்மீக வாழ்வை மெருகேற்றுவதே அப்பணி. நீங்களும் இப்பணியில், திளைத்து, ஓசைபடாமல் உன்னத வாழ்க்கை வாழ்ந்த இக்கனவான்களை வெகுவாக பாராட்டி மெச்சினீர்கள்.

நாம் கண்ட அந்த நன்முத்துக்களெல்லாம், கிறிஸ்தவ சமுதாயத்தால், தயவு தாட்சண்யம் இல்லாமல், ஒட்டுமொத்தமாக ஓரங்கட்டப்பட்டவர்கள். இப்படிப்பட்டவர்களையெல்லாம் பற்றி, நினைப்பாரும், பேசுவாரும் கிறிஸ்தவத்தில் அறவே இல்லையென்று ஓரளவு அறுதியிட்டே சொல்லமுடியும். ஒருவேளை ஆசானின் அருமை வாசகர்களாகிய நீங்களும், ஊரோடு ஒத்துவாழ்ந்து, அவர்களை மறந்திருக்க வாய்ப்புள்ளதாகையால், மீண்டும் ஒருமுறை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். **வீரத்தின் விளைநிலமாய்** பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்த நெஞ்சுரம் கொண்ட

**"சம்மா"** (II சாமு 23:11,12) இயேசுவின் நாட்களில் ஈனப்பிறவியாய் வாழ்ந்த பார்வையற்ற **"பர்திமேயு"** ( மாற் 10:46-58) பவுலுடைய ஊழிய நாட்களில் இரக்கத்திற்கு பாத்திரவானாய் வாழ்ந்த **"ஒநேசிப்போரு"** (II தீமோ 1:16-18) முதல் நூற்றாண்டுக் காலத்தில் வாழ்ந்த பிரபலமற்ற **"சீகார் ஊரார்"** (யோவான் 4:1-30) இன்னும், அப்போஸ்தலன் யோவானால் வெகுவாக மெச்சப்பட்ட **"காயு"** (III யோ 1-6) என்பவர்கள். இவர்களெல்லாம் நம்மால் அற்பமாக எண்ணப்பட்டவர்கள். ஆனாலும், நமது புருவங்கள் உயருமளவுக்கு அற்புதமான பாடம் தந்தவர்கள். இவர்களின் இச்சீர்மிகு வரிசையில், இவ்வருடம் இடம் பிடிப்பவர்கள், **"நாலுபேர்"**. ஆகவேதான், **"நாலுபேரைப் பாருங்கள்"** என்று இம்மாதம் தலைப்பிட்டிருக்கிறேன். யார் இந்த "நாலுபேர்" என்று நீங்கள் கேட்பது புரிகிறது. கொஞ்சம் பொறுங்கள்.

பொதுவாக, நமது வழக்கத்தில் "நாலுபேரைப் பாருங்கள்" என்று ஒரு ஆரோக்கியமான சூழ்நிலையில் சொல்லுவதில்லை. அதைப்போல, எடுத்த எடுப்பிலேயும் இப்படி யாரும் சொல்லுவதில்லை. மாறாக, ஒரு கணிசமான கால கவனிப்பிற்குப் பிறகும், இனி எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்பட வாய்ப்பில்லையென்று திட்டமாகக் கண்டு கொண்ட பிறகும், மற்றும் ஒரு முறையான ஒப்பிடுதலுக்கும் பிறகும்தான் இப்படிச் சொல்லுவதுண்டு. அதாவது, நாலுபேரைப் பார்த்தாலாகிலும் புத்தி வராதா என்ற எதிர்பார்ப்பு இதில் அடங்கியிருக்கும்.

ஆனால், நான் இப்படி விரக்தியின் விளிம்பிற்குச் சென்று, கிறிஸ்தவமே அல்லது வாசகர்களே, **"நாலுபேரைப் பாருங்கள்"** என்று கண்டிப்பாகச் சொல்லவில்லை. அதற்குக் காரணம், கிறிஸ்தவ சமுதாயம் அப்படிச் சொல்லும் நிலையில் இப்பொழுது இல்லையென்பதல்ல. மாறாக, கிறிஸ்தவமே, "நாலுபேரைப் பார்" அல்லது "நான்கு மார்க்கங்களைப் பார்" என்று கூறி, கிறிஸ்தவத்தோடு பிறவற்றை ஒப்பிட்டுப் பேசுமளவு லாயக்கானது எதுவுமேயில்லையென்பதுதான் அதற்குக் காரணம். ஆம், இது உண்மையான வார்த்தை. "யானை படுத்தாலும் குதிரை மட்டம்தான்" என்று சொல்லுகிறார்களே அதைப்போல, இன்றைய கிறிஸ்தவம் அதன் பொலிவை குறிப்பிட்டளவு இழந்து காணப்பட்டாலும் இன்னும் உயர்ந்து நிற்பது கிறிஸ்தவமே. இன்றுமாத்திரமல்ல என்றும் உயர்ந்து நிற்கப் போவதும் கிறிஸ்தவமே. இதில் யாருக்கும் எப்போதும் எவ்வித சந்தேகமும் தேவையில்லை.

சரி, நம்முடைய பாடத்திற்கு வருவோம். புதிய ஏற்பாட்டில் உள்ள முதல் மூன்று நூல்களிலும் இடம் பெற்றுள்ள, குறிப்பிட்ட "நாலுபேரை" இம்மாதம் கண்டு, அவர்கள் மூலம் நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்திற்குத் தேவையான சில சிறப்புப் பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியுமாதலால் அவர்களை

காணும்படி அழைக்கிறேன்.

வழக்கமாக, பின்னணிக்கென்று ஒரு கணிசமான பகுதியை, ஆசிரியவுரையில் நாம் ஒதுக்குவோம். ஆனால், இம்மாதம் அதற்கு அதிக தேவையில்லாமல் போய்விட்டது. ஏனெனில், நாம் பார்க்க உள்ள இந்த **"நாலு பேரின்"** பெயர் பற்றியோ, ஊர் பற்றியோ அல்லது வேறு எது பற்றியோ எந்தத் தடயமும் கிடைக்கவில்லை.

ஆனாலும், நமக்குப் பாடம் கற்றுக்கொடுத்து, நமது நெஞ்சில் இடம் பிடிக்கத் தகுதியானவர்களாக நெடிதுயர்ந்து நிற்பதால் சொல்லப்பட்டுள்ளவைகளை ஆதாரமாகக் கொண்டு, இவர்களின் பின்னணி குறித்து கொஞ்சமாகிலும் தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

உலக மீட்பராகிய நமதாண்டவர் இயேசு தனது ஊழிய நாட்களில், அநேக அற்புத அடையாளங்களைச் செய்தார் என்பது நமக்குத் தெரியும். அவைகளுள் எழுதப்பட்டுள்ளவை மிகச் சொற்பமே. அவற்றுல் ஒன்று தான், **"திமிர்வாதக்காரன் சுகமடைந்த அற்புதம்"** இயேசுவின் முதல் வருட ஊழியத்தில் இவ்வற்புதம் நடந்துள்ளது. (மத்தேயு 9:1-8, மாற்கு 9:1-12, லூக்கா.5:17-26). இந்த அற்புதம் இயேசுவின் வல்லமையால்தான் நடந்தது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனாலும், அச்சம்பவத்தில், **இந்த நாலுபேரும் மிக முக்கிய பங்காற்றியுள்ளனர்** என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஆயினும், இவர்கள் பற்றி மத்தேயு ஆசிரியர் பெரிதாக கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. **"...ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்"** என்று மட்டும் கூறி நம்முடைய "நாலுபேருக்கு" எந்த முக்கியத்துவமும் இல்லாமல் செய்துவிட்டார். (மத்.9:2) லூக்கா ஆசிரியர், கொஞ்சம் பரவாயில்லை என்று சொல்லுமளவு, பட்டும் படாமலும் இவர்களின் பங்கு பற்றி **"....சில மனுஷர் திமிர்வாதக்காரன் ஒருவனைப் படுக்கையோடே எடுத்துக் கொண்டு வந்தார்கள்"** என்று குறிப்பிட்டுள்ளார். (லூக்.5:18). ஆனால், மாற்கு ஆசிரியரோ, அச்சம்பவத்தை சற்று உற்று நோக்கி, வாழ்விழந்தவனுக்கு, வலியவந்து வாழ்வளித்த அப்புண்ணியவான்களின் பெயரைக் குறிப்பிடாவிட்டாலும், அக்காரியத்தில் ஈடுபட்டவர்கள், **குறிப்பாக நாலுபேர் தான்** என்ற எண்ணிக்கையை நமக்குத் தந்து, இம்மாதம் நாம் பயன்பெறும்படியாக உதவி புரிந்துள்ளார். **"அப்பொழுது நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்து கொண்டு வந்தார்கள்"**(மாற்கு 2:3) என்று.

இப்பொழுது, இந்த அற்புத சம்பவத்தில், நம்முடைய "நாலுபேரின்" பங்களிப்பு என்னவென்று பார்ப்போம். ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து, கலிலேயாவிலுள்ள பட்டணங்களிலும், கிராமங்களிலும் கால்நடையாய்ச் சுற்றித்திரிந்து, இராஜ்ஜியத்தைக் குறித்துப் பிரசங்கித்து, அற்புதங்கள் பல செய்து ஒரு கட்டத்தில், தமது பட்டணமாகிய கப்பர்நகூமுக்கு வந்து சேர்ந்தார். (மத் 9:1) அவர் வீட்டிலிருக்கிறார்

என்ற செய்தி கிடைத்தவுடன், அற்புத சுகத்தை இலவசமாய் பெற்றுக் கொண்ட **"நன்றிக் கூட்டமும்"** தங்களுடைய வாழ்விலும் அற்புதத்தை அனுபவிக்கத் துடிக்கும் **"ஆசைக் கூட்டமும்"** இயேசுவுடைய கீர்த்தியின் இரகசியத்தை அறிந்து கொள்ள விரும்பும் **"ஆர்வக் கூட்டமும்"**, எப்படியாவது அவரிடத்தில் தவறு கண்டுபிடிக்க வேண்டுமென்று படாதபாடுபட்டு முயற்சிக்கும் **"குற்றக் கூட்டமும்"** என்னதான் பேசுகிறாரென்று பார்ப்போமே என்று வந்த **"பொழுது போக்கு கூட்டமும்"** ஒரு சேரக் கூடிவிட்டதால், அங்கே கூட்டம் அலைமோதுகிறது. "அப்பொழுது நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்து வருகிறார்கள்". நிலைமை எப்படியிருந்திருக்குமென்று அப்படியே சற்று சிந்தித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். வீட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் பெருங்கூட்டம் இருந்ததால், இந்த நாலுபேரால் கிட்டவே நெருங்கமுடியவில்லை. நெருங்கும்படி மேற்கொண்ட முயற்சிகளெல்லாம் ஜனநெருக்கடிக்குள்ளாக சிக்கி நசுங்கிப்போனது.

ஆனாலும், இந்த நாலுபேரும் திமிர்வாதக்காரன் மீதிருந்த அக்கறையினிமித்தம் தங்களுடைய முயற்சியைக் கைவிடாமல், இயேசு தங்கியிருந்த வீட்டின் மேற்கூரையைத் திறப்பாக்கி, அவனைப்படுக்கையோடே இறக்கி, இயேசுவுக்கு முன்பாகக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். அங்கே இயேசு, **அவர்கள் விசுவாசத்தைக் கண்டு**, திமிர்வாதக்காரனுக்கு சுகம் கொடுத்தார். ஆம், அவன் படுக்கையை எடுத்துக்கொண்டு வீட்டிற்குப் போனான். (மாற்கு 2:1-12).

சரி, இந்த நான்கு பேரையும் நாம் காணவேண்டிய விதத்தில் க ண்டு, பார்க்க வேண்டிய கோணத்தில் பார்த்தால், சில மிக முக்கிய பாடங்களைக் கற்றுத் தரும் வல்லமை படைத்தவர்களாக இருக்கிறார்களென்பதை அறிந்து கொள்ளலாம்.

## I "நாலு பேரின்" அக்கறை

இந்த நாலுபேரும் நமக்குக் கற்றுத் தரும் முதலாவது பாடம், பிறர் மீது நாம் காட்டவேண்டிய **"அக்கறை"** பற்றியது.

திமிர்வாதக்காரனுக்கும், இந்த நாலுபேருக்கும் என்ன சம்பந்தம் என்ற விபரம் வேத வசனங்களில் இல்லை. ஆனால், கண்டிப்பாக அவர்கள் அவன் வீட்டாராகவோ அல்லது உற்றாராகவோ அல்லது அவனுடைய நண்பர்களாகவோ இருந்திருக்க நியாயமில்லை. ஏனெனில், அப்படியிருந்தால் வேதாகமம் ஒருவேளை அதைக் குறிப்பிட்டிருக்கும். மேலும் இந்த நான்கு பேரும் கப்பர்நகூம் பட்டணத்தைச் சேர்ந்தவர்களாகவும் தெரியவில்லை. காரணம், இவர்கள் அப்பட்டணத்துக்காரர்களாக இருந்திருந்தால், இவ்வளவு திரளான கூட்டம் சேருகிறவரை செயல்படாமல் இருந்திருக்கமாட்டார்கள். ஆக, இவர்கள் தூர இடத்திலிருந்து வந்தவர்களாகவே தெரிகிறார்கள்.

ஆயினும், தங்களுக்கு எந்தவித சம்பந்தமுமில்லாத ஒருவன் மீது இவர்கள் காட்டின அக்கறை, கரிசனை நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. ஒருவேளை,

இயேசுவைக் காண வந்த இடத்தில், இந்த திமிர்வாதக்காரனை இவர்கள் கண்டிருக்கலாம். அல்லது, தங்களது ஊரிலிருந்து வரும் வழியில் இவன் படுத்துக்கிடப்பதைப் பார்த்திருக்கலாம். அல்லது, தங்களது ஊரைச் சேர்ந்தவனாகவே இருந்து, வெகுதூரம் இவனைத் தூக்கி வந்திருக்கலாம். இதில், எது உண்மையாக இருந்தாலும், சரீரச் செயல்பாட்டை முற்றிலும் இழந்துபோன அந்த மனிதன் மீது இவர்கள் காட்டின அக்கறை அளவிடமுடியாதது.

இந்த அக்கறைக்கு அடிப்படை என்ன? அவன் சரீர நிலைமையும், அதனால் அவன் பட்ட பாடுகளும் இவர்களுக்கு ஏற்படுத்திய பரிதாப உணர்வுதான். மற்றவர்களின் பிரச்சினைகளைக் கண்டு மனமிரங்கக்கூடிய மனிதர்களாக நாம் இருக்கவேண்டுமென்பது வேதத்தின் எதிர்பார்ப்பு. (கொலோ. 3:12, எபி. 10:34). மற்றவர்களுக்கு, மனம் இரங்கும் குணமுடையவர்களாக அவருடைய பிள்ளைகள் இருக்கவேண்டும் என்பதற்காகவே, புகழ் ஏணியின் உச்சியில் நிரந்தரமாகக் குடியிருக்கக் கூடிய **"நல்ல சமாரியன்"** உவமையை இயேசு சொன்னார். (லூக் 10:30-36).

பிறர்பால் காட்டப்படும் அன்பிற்கும், இரக்கத்திற்கும் பலனாக தேவன் என்னத்தை வாக்குகொடுத்திருக்கிறார் தெரியுமா? மத்.25 :31-42-வேத வசனப் பகுதியை கவனமாக வாசித்துப் பார்த்தால் ஒரு பேருண்மை புலப்படும். ஆம், நம்முடைய நித்தியத்தை தீர்மானிக்கும் வல்லமை இதற்கு நிச்சயம் உண்டென்பது அங்கு தெளிவாக்கப்பட்டுள்ளது. இக்குணத்திற்கு சொந்தக்காரர்களை இறுதிநாளில் பார்த்து **"வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்"** என்று இயேசு சொல்லப்போகிறார். (மத். 25:34) ஆமென்.

அன்பான தேவபிள்ளையே, இக்காரியத்தில் நாம் எப்படிப்பட்ட குணமுடையவர்களாக உள்ளோம்? நித்திய ராஜ்ஜியத்தை சுதந்தரிக்குமளவு சிறப்புள்ளவர்களாக உள்ளோமா? சிந்திப்போம்.

இன்னொரு காரியத்தையும்நாம் இங்கே கவனிக்க வேண்டியது அவசியம். நம்முடைய வேதாகமம் சரீரக் காரியங்களைக் காட்டிலும், ஆவிக்குரியக் காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறபடியால், நாம் பிறருடைய சரீரக் காரியங்களில் காட்டுகிற அக்கறையைக் காட்டிலும் ஆவிக்குரிய காரியங்களில் அதிக அக்கறை செலுத்தவேண்டும். **நமதாண்டவர் நன்மை செய்கிறவராக சுற்றித்திரிந்து, மனதுருகி, மனமிரங்கி அநேகருக்கு சரீர உபாதைகளிலிருந்து விடுதலை கொடுத்தாலும் கூட, சரீர வியாதியில் சிக்கி சீரழிகிற மக்களே நீங்கள் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்கள் வியாதிகள் அனைத்திலுமிருந்து விடுதலை தருவேன் என்று ஒருபோதும் அறைகூவல் விடுக்கவில்லை.** மாறாக, "வருத்தப்பட்டு பாரஞ்சும

**க்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்"** என்றார். (மத். 11:28-29).

ஆத்தும சுகத்திற்கே, நமதாண்டவர் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளபடியால், கிறிஸ்துவின் பிள்ளைகளாக சத்தியத்தின்படி வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் ஒவ்வொருவரும் பாவப்பிணியில் படுகிடையாய் இருக்கிற உலக மக்கள் மீது அக்கறை படுகிறவர்களாக இருப்போமாக!

## II"நாலு பேரின்" முயற்சி

இந்த நாலுபேரும் நமக்குக் கற்றுத்தரும் இரண்டாவது பாடம் **"முயற்சி"**பற்றியது. ஒரு காரியத்தை செய்து முடிப்பதற்கு தேவையான சக்தியை பிரயோகிப்பதுதான் முயற்சியின் பொருள். ஆக, "முயற்சி" என்ற வார்த்தையின் பொருளுக்கு இந்த நால்வரும் இலக்கணமாக திகழ்கிறார்கள் என்ற சொன்னால் அது மிகையாகாது.

ஆம், திரளான ஜனங்கள் முண்டியடித்துக் கொண்டிருக்கிற ஒரு கூட்டத்தினூடே, படுத்த படுக்கையாக ஒருவனைக் கொண்டுபோவதில் உள்ள சிரமங்களை எண்ணிப் பாருங்கள். ஆனால், இந்த நாலுபேரும் அச்சிரமங்களை ஒரு பொருட்டாகவே எண்ணியதாகத் தெரியவில்லை. திமிர்வாதக்காரனை நாலுபேரும் ஒரு முடிவோடு சுமந்துசென்றார்கள். கூட்டத்திற்கு அருகே சென்று, எப்படியாவது, உள்ளே ஊடுருவி விடவேண்டுமென்று அங்குமிங்கும் முட்டிமோதிப் பார்த்திருப்பார்கள். அப்பொழுது, அங்கே கூடியிருந்தவர்கள் இவர்களைப் பற்றி என்ன நினைத்திருப்பார்கள் என்று சற்று யோசித்துப் பாருங்கள். கண்டிப்பாக, மற்றவர்களுடைய பார்வையில், இவர்கள் விபரம் இல்லாதவர்களாகவும், அறிவற்றவர்களாகவும் மாத்திரமல்ல, பைத்தியக்காரர்களாகவும் கூட காட்சியளித்திருப்பார்கள். ஆனால், இவர்கள் அதுபற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாமல், "கருமமே கண்ணாயினர்" என்பது போல, தங்களுடைய காரியத்தில் முழுக் கவனத்தையும் செலுத்தி, தங்களின் முதல் முயற்சி தோற்றுப்போனதால், அடுத்து என்ன செய்யலாம் என்ற சிந்தனையில் மூழ்கி விட்டனர்.

அப்பொழுது அவர்களுடைய சிந்தனைக்கு கிடைத்த தீர்வுதான், **"கூரை வழியாய் இறக்கும் நடவடிக்கையை மேற்க்கொள்ளலாம் என்பது"**. அது என்ன அவ்வளவு சுலபமா? இதைச் செய்வதற்கு அவர்களுக்கு எத்தனை எதிர்ப்பு இருந்திருக்கும் தெரியுமா? முதலாவது, வீட்டிற்குள்ளே கூடியிருந்திருந்தவர்களின் எதிர்ப்பு இருந்திருக்கும். அடுத்து இயேசு தங்கியிருந்த வீட்டு உரிமையாளரின்

எதிர்ப்பு பலமாக இருந்திருக்கும். அவ்வளவு ஏன், அந்தத் திமிர்வாதக்காரனே கூட அவர்களின் அம்முயற்சியை கடுமையாக ஆட்சேபித்திருக்க வாய்ப்புண்டு. அங்குமிங்கும் தூக்கி மேலிருந்து கீழே போட்டால், இந்த உயிரும் போய்விடுமே என்று அவன் அஞ்சியிருக்கக் கூடும். ஆனால், இப்படிப்பட்ட எதிர்ப்புகளெல்லாம் இவர்களின் கடும் முயற்சிக்கு முன்னால், பணிந்து பவ்யமாக நின்று ஓரமாக ஒதுங்கிக் கொண்டது.

அதன்பிறகு, அவர்கள் வீட்டின்மேல் ஏறி இயேசுவுக்கு முன்பாக அந்தத் திமிர்வாதக்காரனைக் கொண்டுபோய்விட்டார்கள். இவர்களின் இச்செயலில் மறைந்திருக்கும் இன்னொரு உண்மையையும் நாம் கவனிக்க தவறி விடக்கூடாது. ஆம், அவர்களின் இச்செயல்பாட்டில் ஒரு அவசரம் தெரிகிறது. காலதாமதமாகும்போது, நமது முயற்சிகள் பாழாகிவிடுமோ என்ற அச்சமும், இயேசு இவ்விடம் விட்டு போய்விட்டால், இம்மனிதன் சுகமடைவது இயலாத காரியமாகிவிடுமோ என்ற பயமும் அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். ஆகவேதான், அம்முயற்சியில் அவ்வளவு தீவிரம் இருந்தது.

அருமையானவர்களே, நானும், நீங்களும் இன்றைக்கு எப்படி? மற்றவர்கள் மீது அக்கறை உள்ளவர்கள் போல பாசாங்கு காட்டுகிற மக்களாக இருக்கிறோமா? அல்லது நமது அக்கறைக்கு அடையாளமாக, ஏதாவது செய்யவேண்டுமென்று முயற்சிக்கிறவர்களாக உள்ளோமா? சொல்லுங்கள். பாசாங்கும், பசப்புத்தனமும் நமது பரம்பரைச் சொத்தாயிற்றே என்கிறீர்களா? அந்த நாலுபேரைப் பார்த்தாகிலும் நமக்கு புத்திவந்தால் சரி என்று நான் கடிந்து சொல்ல விரும்பவில்லை. மாறாக, இவர்களைப் பார் க்காமல் இருந்துவிடாதீர்கள் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சரி, மீண்டும் இவர்களின் இக்குணத்தை ஆவிக்குரிய ரீதியில் ஒப்பிட்டுப் பார்ப்போம். அந்த நாலுபேரும், சரீர வியாதியில் சிக்கியிருந்த அம்மனிதனுக்கு எப்படியாவது, சுகம்பெற்றுத் தந்து விடவேண்டுமென கடுமையாக முயற்சித்ததுபோல, மற்றவர்களின் ஏச்சு பேச்சுக்களையும் ஏளனத்தையும் பொருட்படுத்தாது முயற்சித்தது போல, பாவப்பிணியிலே பீடிக்கப்பட்டிருக்கிற மக்களின் ஆத்தும இரட்சிப்பிற்காக நாம் முயற்சி எடுக்கிற மக்களாக உள்ளோமோ? ஒருவேளை எடுக்கிற கொஞ்சநஞ்ச முயற்சியையாகிலும் ஒரு அவசர உணர்வோடு எடுக்கிறோமா? சிந்திப்போம்.

இதுகுறித்த தேவனுடைய உபதேசத்தை கவனியுங்கள். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதும்போது "நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள் " (எபே. 5 : 16) என்று சொல்கிறாரே, நாம் பிரயோஜனப் படுத்துகிறோமா? அதே பவுலடியார், கொரிந்து பட்டணத்தாருக்குச் சொல்லும்போது "…. **இதோ, இப்பொழுதே அநுக்கிரகக் காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள்**"(2. கொரி 6:2) என்பதையும் கவனிக்கத் தவற வேண்டாம்.

## III "நாலுபேரின்" ஒற்றுமை

இந்த நாலுபேரும் நமக்குக் கற்றுத் தரும் மூன்றாவது பாடம் "ஒற்றுமை" பற்றியது. . ஒரு காரியத்தில் ஈடுபட்டு அதன் வெற்றிக்காக முயற்சிக்கும்போது ஒற்றுமை எவ்வளவு அவசியம் என்பதை இவர்கள் அழுத்தம் திருத்தமாக கோடிட்டுக் காட்டுகிறார்கள்.

ஆம், திமிர்வாதக்காரன் மீது அக்கறைபட்டு, அவனுக்காக முழுமுயற்சியில் ஈடுபட்டபோது, தங்களுக்குள் எந்த பேதமும் வராமல் பார்த்துக் கொண்டனர். ஒருவேளை, இவர்களுக்குள்ளாக பேதமும், கருத்துவேறுபாடுகளும் வந்திருக்குமானால், அந்த திமிவாதக்காரனின் கதி, அதோ கதியாகியிருக்கும். ஆனால், இவர்கள் தங்களுக்குள் எந்தவிதமான மனமாச்சரியங்களுக்கும் இடங்கொடாமல், கொண்ட கொள்கையில் உறுதிகாட்டி, எடுத்த முயற்சியில் தீவிரம் காட்டி செயல்பட்டது நமக்கு ஆச்சரியத்தையே கொடுக்கிறது. இவர்களின் இந்த நிலை, இன்றைய கிறிஸ்தவத்திற்கு முற்றிலும் விரோதமானது. ஆனால், தேவனுக்குப் பிரியமானது. இவர்கள் தங்கள் முயற்சியை பாதியில் கைவிட்டு போகும்படியான சூழல் அடுத்தடுத்து வந்தபோதும், அவையெதுவும் தங்களின் ஒற்றுமையை குலைக்காதபடி காத்துக் கொண்டனர்.

ஆனால், இன்றைக்கு நிலைமை என்ன? திமிர்வாதக்காரனின் சரீரப் பிணியை நீக்குவதில், இந்த நாலுபேருக்குள் இருந்த ஒற்றுமை, உலக மக்களின் பாவப் பிணியை நீக்கும் மாபெரும் பொறுப்பை ஏற்றுள்ள கிறிஸ்தவத்திடம்- கிறிஸ்தவ சமுதாயத்திடம், குறிப்பாக உண்மைச் சத்தியத்தை ஓங்கி ஒலிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள கிறிஸ்துவின் சபையாரிடம் உள்ளதா? சொல்லுங்கள்.

தேவனுடைய பிள்ளைகள் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தாவீதைக் கொண்டு தேவன் கொடுத்த ஒரு வசனத்தைக் கவனியுங்கள். "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது?" என்று. (சங். 173:1) அப்போஸ்தலனாகிய பேதுரு தனது நூலில்,"மேலும், நீங்கள் எல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருங்கள்...." என்று கூறுகிறார் (I பேதுரு 3:8) மேலும், அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்தியரில் ஒரு புத்திமதியைக் கொடுக்கிறார். "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தை பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" என்கிறார். (I கொரி.1:10) அதுமாத்திரமல்ல, அடுத்த வசனங்களில், அவர் பிரிவினையை கடுமையாகக் கண்டிக்கிறார். (I கொரி 1:11-13).

இன்றைக்கு உலகம், கிறிஸ்தவத்தை பத்தோடு பதினொன்றாக நினைத்துப் பாவிப்பதற்கும், ஏற்கனவே இருக்கின்ற ஏராளமான சபைகளோடு, கிறிஸ்துவின் சபையும் ஒன்று என நினைப்பதற்கும் என்ன காரணம்? ஒருவேளை, ஆயிரம்

காரணங்களை ஆளாளுக்கு அடுக்கலாம். ஆனால், அவற்றுள் முதன்மையானது ஒற்றுமையின்மைதான் என்பதை யாரால் மறுக்க முடியும்? உலகமானது, இயேசு தேவனிடத்திலிருந்து வந்தார் என்பதை விசுவாசிக்க வேண்டுமானால், நம்மைப் பின்பற்றுகிற எல்லாரும் ஒன்றாயிருக்க வேண்டுமென்றுதானே இயேசு ஜெபித்தார். (யோவா 17:21). அப்படியானால் அந்த ஒற்றுமை எங்கே? அது மாயமாய் மறைந்துவிட்டதின் இரகசியம் என்ன? அந்த ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளின் தோல்விக்கு காரணம் என்ன? சிந்திப்போம். நம்முடைய நோக்கத்தில் தெளிவு பெற்று, அந்த நாலுபேரைப் போல், ஒற்றுமையுடன் செயல்பட்டு வெற்றி பெறுவோம்.

## IV "நாலுபேரின்" நம்பிக்கை

இறுதியாக, இந்த நாலுபேரும் நமக்குக் கற்றுத் தரும் பாடம், **"நம்பிக்கை" - "விசுவாசம்"** இந்த அற்புத சம்பவத்தில் இயேசுவின் மீது, அவருடைய அற்புத பற்றியது. வல்லமையின் மீது அவர்களுக்கிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை அப்பட்டமாக வெளியாக்கப்பட்டுள்ளது. நமதாண்டவரே, அவர்களின் விசுவாசத்திற்கு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். (மாற்கு 2:5)

ஆம், இப்பகுதியின் வேத வசனங்களை நாம் படித்தால், **"இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு...."** என்று தான் உள்ளதே தவிர "அவன்" விசுவாசத்தைக் கண்டு என்று அல்ல. இயேசு அவர்களுடைய விசுவாசத்தை இருதயத்திலும், செயலிலும் கண்டார். எப்படியெனில், "மனுஷர் உள்ளத்திலிருப்பதை அறிந்துகொள்ளும் வல்லமை" அவருக்கு இருந்தது (யோவா. 2:25). ஆகவேதான், அவர்களைக் கண்ட மாத்திரத்தில், அவர்கள் விசுவாசத்தைக் கண்டு கொண்டார். இந்த நாலுபேரும் மெய்யான விசுவாசிகள். விசுவாசிகள் என்ற பெயருக்குப் பொருத்தமானவர்கள்.

விசுவாசம் என்பது மருந்துக்குகூட இல்லாமல், **"விசுவாசிகள்"** என்ற பெயரை போகிற போக்கில் தட்டிச் செல்கிற நம்முடைய நாட்களில், விசுவாசிகள் என்று பெயர் எடுப்பதற்கு இந்த நாலுபேரும் எவ்வளவு பாடுபட்டிருக்கிறார்கள் பாருங்கள் தங்களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்கு இவர்கள் கொடுத்த விலை மிகப்பெரிய விலை. இயலாதவன் மீது இரக்கப்பட்டு, அவனுக்கு உதவ கடும் முயற்சி மேற்கொண்டு, முயற்சியில் தோற்றுவிடக் கூடாது என்பதற்காய், முழு ஒற்றுமை காத்து, அதன்பிறகே, "விசுவாசிகள்" என்ற பெயருக்கு சொந்தக்காரர்களானார்கள்.

ஆகவே, அருமையானவர்களே, நாம் விசுவாசிகளென்று வெறுமனே சொல்லிக்கொண்டு, நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டு, சமுதாயத்தையும் ஏமாற்றுகிற மக்களாக இராமல், விசுவாசத்திற்கான விலை கொடுப்போம். நம்முடைய விசுவாசத்தைச் செயலில் காட்டுவோம். யாக்கோபு ஆசிரியரும், தேவனுடைய பிள்ளைகள் அப்படிச் செய்ய வேண்டுமென்றே கூறுகின்றார். **"அப்படியே, விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னில்தானே செத்ததாயிருக்கும்"** (யாக். 2:17). நாம் ஒவ்வொருவரும் "தேவனாலே எல்லாம்

கூடும்" (மத் 19:26) என்றும், "அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்" (சங். 33:9) என்றும் விசுவாசித்து, அதற்கேற்றவகையில் செயல்படுவோம். நம்முடைய நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் எதிராக வருகின்ற காரியங்கள் எத்தகையதாக இருந்தாலும், எப்படிப்பட்ட தடைகளாக இருந்தாலும், அவைகளையெல்லாம், இந்த நாலுபேரைப்போல, தகர்த்து தவிடுபொடியாக்கி, நாம் எதிர்பார்க்கும் ஆசீர்வாதங்களை நன்மையானவைகளை அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்வோம்.

இவர்கள் செய்த இன்னொரு முக்கியமான காரியம் திமிர்வாதக்காரனை இயேசுவண்டை அழைத்து வந்தது. அதைப்போலவே, பாவத்தில் சிக்கியுள்ள மக்களை நாம் இயேசுவிடம் கொண்டு வந்து, விடவேண்டும். அவருடைய வல்லமை நிறைந்த வார்த்தைகளண்டை கொண்டு வந்து விடவேண்டும். இந்த "நாலுபேரை"ப் போல், நாமும் அப்படிச் செய்தால், திமிர்வாதக்காரனுக்கு சரீர சுகம் கிடைத்தது போல, நம்மால் அழைத்துவரப்படுகிறவர்களுக்கு ஆத்தும சுகம் கிடைக்கும். செய்வோமா?

கர்த்தருக்குள் அருமையான வாசகர்களே, ஊர், பேர் தெரியாத இந்த நாலுபேரிடமிருந்தும், நாம் பாடங்களைக் கற்றுக்கொள்ள பரலோகத்தின் தேவன் நமக்கு துணை நின்றார். நமக்குப் போதித்த இந்த நாலு பேரின் தகுதியை நாம் தராசில் நிறுத்திக் கொண்டிராமல், அவர்கள் மூலம் கற்றுக்கொண்ட பாடங்களை நமது வாழ்வில் பின்பற்றி, மெய்கிறிஸ்தவர்களாக ஜீவிப்போமாக!

**S. ராஜநாயகம்**


## உங்கள் கவனத்திற்கு

அதிகத் தரமுள்ள பல வண்ணத் தாள்களைக் கொண்டு, நேர்த்தியான அளவுகளில் வடிவமைக்கப்பட்டு, சிறப்பான முறையில் அச்சிடப்பட்டு, எடுப்பான தோற்றம் கொண்ட சுவிசேஷக் கைப்பிரதிகள் (Gospel Tracts) உங்கள் உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது. **மிகக் குறைந்த விலை**. தேவைக்கு முந்துங்கள்.

**தலைப்புகள்**

1. உன்னை நீயே எண்ணிப்பார்
2. கண் இல்லாதவன் கண்டு கொண்டான்
3. மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா?
4. இன்றைக்கு நீங்கள் மரிக்க நேர்ந்தால்....
5. ஞானஸ்நானம்
6. யார் கிறிஸ்தவன்?
7. ஆராதனை
8. சபை என்பது என்ன?

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி*

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

தபால் பெட்டி எண் - 27, காங்கேயம் - 638 701.

✆ 04257 - 20030

# சபையின் ஆளுகை அமைப்பு

**"நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி"** என்ற தொடர்பாடத்தின் மத்தியில் நாம் உள்ளோம். ஒருவன் அப்படிச் செய்வதற்கு தேவையான அனைத்து காரியங்கள் குறித்தும், ஒவ்வொன்றாக இத்தொடரில் நாம் பார்த்துக் கொண்டுள்ளோம். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்து, நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபை இல்லாமலிருந்தால், சபை தொடங்கும்படியாய் உங்களுக்கு உதவுவதுதான் எங்கள் நோக்கம். நீங்கள் கிறிஸ்தவராக இல்லாமலிருந்தால், நீங்கள் வேதசனங்களினடிப்படையில் ஒரு கிறிஸ்தவராக மாற உங்களை ஊக்கப்படுத்துகிறோம். இதை நீங்கள் மிக சுலபமான காரியங்கள் மூலம், அதாவது, கர்த்தரை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவின் மீதுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவதின் மூலம் செய்ய முடியும். (அப் 2:38) உங்கள் கீழ்ப்படிதல் பூரணமாகும் போது, கர்த்தர் உங்களை இரட்சித்து, அவருடைய சபையில் சேர்த்துக்கொள்வார். (அப் 2:47). இது ஒரு எளிமையான காரியமில்லையா? நீங்கள் கிறிஸ்தவரான பின்பு, அங்கு கர்த்தருடைய சபை இல்லாமலிருந்தால், சபையை ஆரம்பிக்கும் வேலையில் நீங்கள் முன்னின்று செயல்பட முடியும். ஒருவேளை, சபை அங்கு இருந்தால், நீங்கள் அப்பிராந்திய சபையில் அங்கமாக வேண்டுமென்று, சொல்லவேண்டிய அவசியமில்லை.

ஓரிடத்தில், ஒரு பிராந்திய சபையை ஆரம்பிக்கும்போது, மனதில் கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான காரியம் என்னவெனில், அதன் ஆளுகை அமைப்பு எப்படி இருக்கவேண்டுமென்பது. ஆகையால், அதற்கு உதவும்படியாக இப்பாடத்தில் சில சிந்தனைகளைத் தர விரும்புகிறோம்.

நம் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறபடி, எந்த ஒரு ஸ்தாபனமும் ஒழுங்காகச் செயல்படுவதற்கு, அதற்கு சரியான ஆளுகை அமைப்பு முறை இருக்கிறது. பள்ளிகள், தொழில்நிறுவனங்கள், இராணுவம், அரசாங்கம் என்று இதற்கு உதாரணங்களை நாம் சொல்லிக்கொண்டே போகலாம். இவையனைத்திற்கும் ஒரு காரியம் பொதுவாக உள்ளது. அவர்கள் திட்டமிட்டு, காரியங்களை முறைப்படுத்தி வேலை செய்கிறார்கள். அங்கே ஆளுகைக்கான காரியங்கள் முறைப்படுத்தப் படாமலிருந்தால், குழப்பமும், உற்பத்திக் குறைவும் ஏற்பட்டு, இறுதியில் தோல்வி அல்லது நஷ்டத்தில் போய் முடியும்.

அதைப் போலவே, மார்க்க காரியங்களிலும், ஆளுகைக்கான அமைப்பு முறை இருக்கவேண்டும். கிறிஸ்து தமது சபையைக் கட்டுவேன் என்று வாக்குக் கொடுத்தார். (மத் 16:18) அதைப் போலவே செய்தார் (அப் 2அதி) சபையானது ஜனங்களை,

அதாவது இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்டுள்ளதால், அது ஒழுங்காகவும், முறையாகவும் நடத்தப்படுவதற்கான தேவை ஏற்படும்.

கிறிஸ்து சபைக்கு தலையாயிருப்பார் என்றும், (கொலோ. 1:18;எபே 1:22,23) சரீரமானது அல்லது சபையானது, அவருக்குக் கீழ்ப்படிந்தவர்களைக் கொண்டதாக இருக்குமென்றும் வேதாகமம் கூறுகிறது. கிறிஸ்து ஸ்தாபித்த சபையானது உலகெங்கிலும் இருந்தாலும்.... அது ஒரு பிராந்திய சபை என்றளவில், ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறது. இந்த ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் கிறிஸ்து தலைவராயிருக்கிறார். இரட்சிக்கப்பட்டவர்கள் அதன் அங்கத்தினர்களாய் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் சபைக்கு, உலகளாவிய மனித ஆளுகை அமைப்பு இல்லாவிட்டாலும், பிராந்திய அளவில் அதற்கு ஆளுகை அமைப்பு முறை உண்டு.

ஒரு பிராந்திய சபையின் ஆரம்ப நாட்களில், சபையின் ஆண் அங்கத்தினர்கள் எல்லோரும் அதன் தேவைகளைச் சந்திக்கவும், சபைக்கான காரியங்களை பொறுப்பேற்றுக்கொள்ளவும் வேண்டும். இருக்கும் ஆண் அங்கத்தினர்களில், சபையானது பிரசங்கிகள், வேதத்தைப் போதிக்கும் ஆசிரியர்கள், பாடலை நடத்துகிறவர்கள் போன்றவர்களைக் கொண்டிருக்கலாம். ஆனால், ஒரு பிராந்திய சபையானது வயதிலும், எண்ணிக்கையிலும், வளரும் போது அதற்கு ஆளுகை அமைப்பு முறை தேவை, ஒரு சபை முறையாக வளரும்போது மூப்பர்களாகவும், உதவிக்காரர்களாகவும் ஏற்படுத்தப்படக்கூடியவர்கள் அங்கு இருக்க முடியும்.

இந்தக் காரியங்களைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுக்கு எழுதும் போது, "கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான். இது உண்மையான வார்த்தை. ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்க வேண்டும். அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருந்து, தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும் தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது. அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கும், புறம்பானவர்களால், நற்சாட்சி பெற்றவனாயுமிருக்கவேண்டும். அந்தப்படியே, உதவிக்காரரும் இரு நாக்குள்ளவர்களாயும், மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும், இராமல், நல்லொழுக்க முள்ளவர்களாயும் விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே

காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருக்க வேண்டும். மேலும், இவர்கள் முன்னதாக சோதிக்கப்படவேண்டும்; குற்றஞ் சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம். அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கவேண்டும். மேலும் உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும். இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்" (1 தீமோ 3:1-13) என்று கூறியுள்ளார்.

இன்னும், தீத்துவுக்கு எழுதும் போது " நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னை கிரேத்தாதீவிலே விட்டுவந்தேனே. குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும் துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும், பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே ஏற்படுத்தலாம். ஏனெனில், கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்ற விதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனும், தன் இஷ்டப்படி, செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபானப்பிரியமில்லாத்வனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர்மேல் பிரியமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும், ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டும். அநேகர், விசேஷமாய் விருத்த சேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடக்கவேண்டும்; அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள்" என்று கூறியுள்ளார். (தீத்து 1:5-11)

இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். சபையின் மூப்பர்களாக ஏற்படுத்தப்பட்டவர்கள், வேத வசனங்களில், மேய்ப்பர்கள், கண்காணிகள் என்றும் பேசப்பட்டிருக்கிறார்கள். மேலும், மூப்பர்களை ஏற்படுத்துவற்கு,வேத வசனங்களில் குறிப்பிட்டுள்ள தகுதியம்சங்களைக் கொண்டவர்கள் குறைந்தபட்சம்,இரண்டு பேராவது, அப்பிராந்திய சபையில் இருக்கவேண்டும். அப்படியிருந்தால், அச்சபையானது, மூப்பர்களாக இருக்கும்படி அவர்களை ஏற்படுத்தலாம். மூப்பர்கள்

என்ற நிலையில் அவர்கள் கிறிஸ்துவுக்குக் கீழாக இருந்து, தாங்கள் செய்கின்ற, சொல்லுகின்ற அனைத்தும் தேவனுடைய வாக்கியங்களின்படி உள்ளதா என்று ஜாக்கிரதையாய் கவனித்து, அதன்படி மந்தையை மேய்த்து அதாவது, தேவனுடைய வார்த்தைகளின்படிதான் சபையானது போதிக்கப்படுகிறதா என்று பார்த்து, அதனடிப்படையில் அப்பிராந்திய சபையாருக்கு ஒரு சிறந்த தலைமையைக் கொடுக்கவேண்டும். ஒருவன் புதிதாக கிறிஸ்துவுக்குள் வந்த அங்கத்தினராக இருந்தால், அவனை மூப்பராக ஏற்படுத்தக் கூடாது. மூப்பனானவன், கண்டிப்பாக ஒரே மனைவியை உடைய புருஷனும், தங்கள் பிள்ளைகள் கர்த்தருக்கு கீழ்ப்படியும்படியான வயதை எட்டி, வசனத்திற்கு கீழ்ப்படிந்து, விசுவாசமுள்ள வாழ்க்கை வாழக்கூடியவர்களை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். மேற்சொன்ன தகுதிகளில் இரண்டு மூன்றைத் தவிர, மற்ற எல்லா தகுதிகளையும், சபையின் எல்லா அங்கத்தினர்களும் உடையவர்களாக இருக்க வேண்டும்.

ஒரு பிராந்திய சபையின் மூப்பர்கள், அச்சபைக்கு மாத்திரமே மூப்பர்களாக இருக்க முடியும். மற்ற பிராந்திய சபைகளின் மீது அவர்களுக்கு அதிகாரமில்லை. அதைப்போல, மற்ற எந்த பிராந்திய சபையும், இவர்களை ஆள முடியாது.

உதவிக்காரர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் மூப்பர்கள்போலவே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இருக்கவேண்டும். அவர்கள் மூப்பர்களுக்குக் கீழாக உதவிக்காரர்களாக அல்லது வேலைக்காரர்களாக பணியாற்றுவர். நாம் வாசித்தது போல, அவர்களுக்கும் தகுதிகள் உண்டு அவர்களுடைய மனைவிகளும் சில குறிப்பிட்ட தகுதிகளைப் பெற்றுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

பொதுவாக நாம் ஒரு சபையில் ஆவிக்குரிய ரீதியில் நம்மை வழிநடத்துபவர்களை "மூப்பர்கள்" என்றும், சபையின் சரீரப்பிரகாரமான தேவைகளைக் கவனிப்பவர்களை "உதவிக்காரர்கள்" என்றும் எண்ணுகிறோம்.

ஒரு பிராந்திய சபையின் ஆரம்ப கால கட்டத்தில் அல்லது முதல் சில வருஷங்களுக்கு, அது மூப்பர்களும், உதவிக்காரர்களும் இல்லாமல் செயல்படமுடியும், ஆனால், தேவையான அளவு வளர்ச்சி பெற்ற ஒரு பிராந்திய சபை, வேதாகமத்தின் அடிப்படையிலான அதன் செயல்பாட்டிற்கு, அது மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் உடையதாக இருக்கவேண்டும்.

சபையின் அனைத்து அங்கத்தினர்களும், மூப்பர்களை நேசித்து, மரியாதை செலுத்தி, அவர்கள் கிறிஸ்துவை பின்பற்றுவது போல, அவர்களின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

அடுத்து, பிரசங்கிகள் பற்றியது, ஒருவேளை ஒரு இளம் சபைக்கு பிரசங்கிப்பவர் இருக்கலாம். அல்லது இல்லாமலிருக்கலாம். பிரசங்கியானவன் ஒரு சபையின்

மேய்ப்பனோ அல்லது அதை ஆளுகிறவனோ அல்ல. மாறாக, ஒரு பிராந்திய சபையில் மூப்பர்கள் இருந்தால், அவர்களுக்கு கீழாக பணிபுரிகிறவர். மூப்பர்கள் இல்லாதபட்சத்தில், தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பவர் என்ற அந்தஸ்தில், சபையின் ஆண் அங்கத்தினர்களுடன் சேர்ந்து பணியாற்றுகிறவர். ஒழுக்க ரீதியாக, ஒரு பிரசங்கி மிகச் சிறந்தவராக இருந்து, ஆரோக்கியமான உபதேசங்களைப் போதிக்க வேண்டும். இளம் பிரசங்கியாகிய தீமோத்தேவுக்கு பவுல், "ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களில் மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிக்ளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்.விவாகம் பண்ணாதிருக்கவும்...." என்று ( 1தீமோ. 4:1 ,2)ல் சொல்லியுள்ளார். தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கும் காரியத்தில், கர்த்தருக்காகவும், சக கிறிஸ்தவர்களுக்காகவும் தனது கடமை மற்றும் பொறுப்பு என்னவென்பதை நினைவுபடுத்தும் பல வேத வசனங்கள், தேவனால் கொடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தவிர, ஒரு சபையில் வேத ஆசிரியர்கள் உண்டு. இவர்கள் ஆண்களாகவும், பெண்களாகவும் இருக்க முடியும். ஆனால், பெண்கள், மற்ற பெண்களுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் தான் போதிக்கவேண்டும்.

ஒரு சபையானது எண்ணிக்கையில் பெரியதோ அல்லது சிறியதோ, அதற்கு செய்து முடிக்கப்படுவதற்கான சில செயல் திட்டங்கள் இருக்க வேண்டும். யாராவது ஒருவர் பாடலை வழிநடத்தவேண்டும், பிறகு பொருளாளராக ஒருவரை தேர்ந்தெடுக்கும்படியான அவசியம் வரும், வேறொருவர் கர்த்தருடைய பந்திக்குத் தேவையானதை ஆயத்தம் செய்ய வேண்டும். இன்னும் இது போல வேறு பல காரியங்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டியதிருக்கும்.

ஆகையால், ஒரு பிராந்திய சபையின் காரியங்கள் மிகச் சிறப்பாக, இருப்பதற்கும் எல்லாக் காரியங்களையும் ஒழுங்காகவும், சமாதானமாகவும், செய்வதற்கும், சபையின் ஆண் அங்கத்தினர்கள் அனைவரும், வேத வசனங்களின்படி தங்களை ஒழுங்குப்படுத்திக் கொள்ளவேண்டும். அந்நிலையில் சபையானது சீராக வளர்ந்தால், ஒரு நாளில், மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் ஏற்படுத்தும் என்று நம்பமுடியும்.

உங்களுடைய பிராந்திய சபையின் சூழ்நிலை பற்றிய எண்ணஙகளுக்கு, இப்பொழுது பார்த்த காரியங்கள் உதவிகரமாக இருந்திருக்குமென நான் நம்புகிறேன். மீதிகாரியங்களை தொடர்ந்து அடுத்த மாதம் பார்ப்போம்.

**J.C. சோட்.**

## பெண்கள் பகுதி

# கற்றுக்கொள்வதும், வளருவதும் தான் ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதற்கு அழகு

**தூ**ங்கும் தீமோத்தேயுவை தன் கரங்களில் ஏந்தியவளாய் ரேச்சல், எலிசபெத்தை சந்திக்க செல்கிறாள். ஒரு கப் டீயை அருந்தியபின் எலிசபெத் கூறுகிறாள், "ஞாயிற்றுக் கிழமை ரேச்சல் வீட்டில் நடந்த கூட்டம் வித்தியாசமான முறையில் இருந்தது என்றும், நிறைய காரியங்களை சிந்திக்க வைத்தது என்றும், தான் செல்லும் சபையைப் பற்றி பாஸ்டரிடம் கேட்கவேண்டும். எப்பொழுது அது ஆரம்பிக்கப்பட்டது, எப்படி இரட்சிக்கப்பட்டோம், சபையின் கொள்கைகள் என்னவென்றெல்லாம் கேட்கவேண்டும். நாம் தேவனிடத்தில் விசுவாசம் வைத்தால் போதும் என்று அவர் சொன்னது எனக்கு நினைவிருக்கிறது" என எலிசபெத் முடிக்கிறாள்.

"அவரிடம் கேட்பது நல்லது" ரேச்சல் ஒத்துக்கொண்டாள். உண்மையாகவே எப்படி இவ்வளவு சபைகள் தோன்றின வென்று எங்களுக்கும் தெரியாமலேதான் இருந்தது. ஆண்ட்ரூவும் நானும் வேதாகமத்தில் ஒரே ஒரு சபைதான் இருக்கிறது என்று வாசித்து மிகவும் ஆச்சரியப்பட்டோம். இயேசு கிறிஸ்து ஒரே ஒரு ராஜ்யத்தை அல்லது சபையைத்தான் கட்டினார்.

"நீ சொல்வது சரி" என எலிசபெத் பதிலுரைத்தாள். வேதாகமம் ஒரே ஒரு சபையைக் குறித்துப் பேசுமானால் ஒரு சபைதான் இருக்க முடியும். கொஞ்சமாக நான் வேதாகமத்தைப் பற்றித் தெரிந்திருந்தும் கூட எனக்கு அது நன்றாகவே விளங்குகிறது. ஆனால், கட்டாயமாக எங்களுக்குத் தெரியாத சில காரியங்களெல்லாம் எங்கள் பாஸ்டருக்கு தெரிந்திருக்கும். எல்லா சபைகளும் எப்படித் தோன்றின என்பதை அவர் சற்று விளக்கமாகக் கூறுவார்.

"ஒருவேளை இருக்கலாம் என ரேச்சல் ஒத்துக்கொள்கிறாள்" அவர் அபபடி விளக்கிக் கூறினால் நாங்களும் அதைக் கற்றுக்கொள்கிறோம். ஏனென்றால் எல்லாவற்றுக்கும் மேலாக நாங்கள் உண்மை எதுவென்று தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

"ரேச்சல் சபையாக கூடி வந்தபோது, ஆண்ட்ரூ, கர்த்தருடைய பந்தியின் மூலமாக அவரை நினைவுகூரும்படி சொன்னதும், வசனத்தை வாசித்து இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் நமக்காக தியாகமாகக் கொடுக்கப்பட்டதை நினைக்க வேண்டும், என்றும் அவருடைய இரத்தத்தின் மூலம் நம் பாவங்கள் கழுவப்பட்டது என்று கூறின போது எல்லாமே எனக்கு சரியாகவும், அர்த்தமுள்ளதாகவும் தோன்றியது. அதுவரை நாங்கள் அவைகளை கேட்டதில்லை. ஏதோ ஒன்று அல்லது இரண்டு முறை கர்த்தரின் பந்தி நடக்கும்போது நான் கூட்டங்களுக்குச் சென்றிருக்கிறேன். ஆனால் அவைகளைப் பற்றி எனக்கு அதிகம் ஒன்றும் விளங்கிக் கொள்ளமுடியவில்லை.

"ஆண்ட்ரூ வேதத்தை எடுத்து வாசித்து நம்முடைய உள்ளத்தை சோதித்துப் பார்த்து அந்தப் பந்தியில் பங்கு பெற வேண்டும், பிறகு அமைதியாக சில நிமிடங்கள் உட்கார்ந்து ஜெபிக்கவும் சொன்னான். எனக்குத் தெரியும் என்னால் அப்பத்திலும், ரசத்திலும் பங்குபெற முடியாது என்று. என்னுடைய மனச்சாட்சி கூறியது

அவருடைய குடும்பத்தில் அங்கமாக இருப்பதற்கு தேவன் கேட்ட எதையுமே நீ செய்யவில்லையே" என்று.

ரேச்சல் எழுந்து எலிசபெத்தினருகே சென்று அவருடைய கரத்தை தன் கரத்தோடு சேர்த்துக் கொண்டாள். ரேச்சல் எலிசபெத்துக்கு ஆறுதல் சொல்கிறாள். நீ நிறைய காரியங்களை படிக்க வேண்டியுள்ளது. தேவன் உன்னை எதைச் செய்யச் சொல்கிறார் என்பதை நீ அப்போது புரிந்து கொள்வாய். நானும் ஆண்ட்ருவும் உன்னுடன் சேர்ந்து படிக்க ஆவலாய் உள்ளோம் என்பதை நீ தெரிந்து கொள்"

ஜேம்ஸ் குடும்பம் ஆவிக்குரிய காரியங்களில் வளர ஆண்ட்ருவுக்கு விருப்பம் உள்ளது. அவன் தேவனை விசுவாசிக்கிறானா? என்பது கூட எனக்கு சந்தேகமாக உள்ளது. அவன் எந்த சபையிலும் இன்னும் சேரவில்லை. மத சம்பந்தப்பட்டவர்கள் பாசாங்கு செய்பவர்கள் அல்லது மாயக்காரர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறான்.

"நல்லது, இயற்கையாகவே, யார் வேண்டுமானாலும் நல்லவர்கள் போல் பாசாங்கு செய்யலாம்" என்பதை ரேச்சல் ஒத்துக்கொள்கிறாள். அதற்காக வேதாகமமே தவறு என்பது அர்த்தமற்றது. முதலில் நானும் ஆண்ட்ருவும் வேதத்தை படிப்பதற்குமுன், என்னால் சொல்ல முடியும் எங்களுடைய வாழ்க்கை நன்றாகவே இருந்தது. முன்பெல்லாம் எங்களுடைய எண்ணத்தின் மையமாக எங்களுடைய வேலை, பணம், நாங்கள் வாங்க நினைத்த பொருள்கள் மேல் இருந்தது. தீமோத்தேயுவின் பிறப்பு நிறைய காரியங்களை மாற்றியது. இப்போது நான் வீட்டில் இருந்து அவனுக்கு ஒரு நல்ல தாயாக இருக்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம்.

"பொருளாதார விஷயத்தில் எப்படி சமாளிப்பீர்கள்?" எலிசபெத் குறுக்கிட்டாள்.

" இது சுலபமான காரியமல்ல" ஒத்துக்கொள்கிறாள் ரேச்சல், வீட்டுப் பொருள்களை உபயோகிக்கும் விஷயத்தில், மிகவும் ஜாக்கிரதையாக வீணாக்காமல் இருந்தால், ஓரளவு சமாளித்துக் கொள்ள முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். ஆண்ட்ருவும் தன் அலுவலகத்தில் எல்லா வகையிலும் மிகவும் முயற்சியுடன் பணியாற்றினால் அவருக்கு கிடைக்க வேண்டிய வேலை உயர்வும் சீராக கிடைக்கும். ஒரு கிறிஸ்தவன் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் மிகவும் ஞானமாக, சிறப்பாக செய்ய வேண்டும் என்பதை நாங்கள் கற்றுக் கொண்டுள்ளோம். மத்தேயு 6:33-ல், இயேசு கிறிஸ்து, "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும்" என்று வாக்குரைத்திருக்கிறார். இந்த வாக்குத்தத்தம் பொருத்தமாக இருக்கும் என்று நாங்கள் ஆறுதலடைவதோடு, நாம் சரியான வழியில் வாழ்ந்து, அவரையே தஞ்சமென்று நம்பி, செய்வதை சிறப்பாக செய்து, வாழும்போது இயற்கையாகவே அதற்கு பலனாக நன்மையான காரியங்கள் நம்முடன் சேர்ந்து கொண்டேயிருக்கும். அத்தோடு தேவன் வாக்குக் கொடுத்திருக்கிறார். தன்னுடைய சொந்த பாதுகாப்பையும், ஆசீர்வாதத்தையும் கூட்டிக் கொடுப்பார். பின்பு தேவைகளெல்லாம் சந்திக்கப்படும்".

"ஆனால், ரேச்சல் நாம் நேற்று ஆராதிக்கும் பொழுது நீயும் ஆண்ட்ருவும் கர்த்தருக்கென்று காணிக்கை கொடுத்தீர்கள். நீ வேலையில்லாமல் இருக்கும் பொழுது, நிஜமாகவே அந்தத் தொகையை சபைக்கென்று ஒதுக்கி வைப்பீர்களா?

"கொடுத்தலைப் பற்றி நாங்கள் படித்தோம். பழைய ஏற்பாட்டில் யூதர்கள் தங்கள் சம்பாத்தியத்திலிருந்து பத்தில் ஒரு பாகம் கொடுத்தார்கள் என்று . ஒரு முறை மல்கியா தீர்க்கதரிசி சவால் விட்டு ஒரு கேள்வியுடன் ஆரம்பிக்கிறார் "**மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள் எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே."**

**நீங்கள் சபிக்கப்பட்டவர்கள். ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்.**

**என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டகசாலையிலே கொண்டு வாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பல கணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைத் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"**

ஆண்ட்ருவும், நானும் அந்த மக்களுடைய மாயையான போக்கைப் பற்றிப் பேசினோம். ஆவிக்குரிய விஷயத்தில் எல்லா காரியங்களிலும் சரியாக இல்லையென்றால் நாம் செய்கிறவைகள் யாவும் வீணாய் போய்விடும். அவரை வஞ்சிக்கக் கூடாது. எனவே ஆண்ட்ரு தன் சம்பளத்தை வாங்கினவுடனே பத்தில் ஒரு பங்கை எடுத்து தேவனுக்காக வைத்து விடுவோம். அந்த பணத்தை வெளியே எடுத்து வைத்த பின்பு நாங்கள் .ஒரு பட்டியல் போடுவோம். வீட்டுக்கு இவ்வளவு, போக்குவரத்துக்கு இவ்வளவு, வரிகளுக்காக இவ்வளவு, உணவுக்காகவும், உடைக்காகவும் இவ்வளவு, எதிர்பாராத செலவுகளுக்காக இவ்வளவு என்று பிரித்து வைப்போம். அத்தோடு சிறிதளவு சேமித்தும் வைப்போம் என்ற நம்பிக்கை உள்ளது. இது நடைமுறையில் அவ்வளவு சுலபமல்ல. ஆனால் நாங்கள் தேவனை முதலாவதாக வைத்திருப்பதால் அவர் எங்களுக்கு அப்படிச் செய்ய உதவி செய்வார்.

" அவ்வாறு செய்வதற்கு அதிக நம்பிக்கை தேவைப்படுகிறது" என்று எலிசபெத் குறிப்பிட்டாள். "ஆனால் தேவனுக்கென்று சொந்தமான பணத்தில் நீங்கள் என்ன செய்வீர்கள்?

"வரும் காலங்களில் மற்ற சில மக்களும் சபையில் சேருவார்கள். அப்போது ஆண் அங்கத்தினர்கள் சேர்ந்து அதை எப்படி பயன்படுத்துவது என்பது பற்றி தீர்மானிப்பார்கள். ஒருவேளை தேவையில் இருக்கும் ஏழை மக்கள் இருப்பார்கள். சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் தருணம் கூட வரலாம். அப்போது பணச் செலவு ஆகும். எந்த வகையான தேவையாயிருந்தாலும் மக்கள் தேவனுடைய அன்பை கண்டுகொள்ளுமளவுக்கு அப்பணம் செலவு செய்யப்படும்.

**B.B. Choate** **R.R. Nayagam**

# "கர்த்தரின் பந்தி"

## பாடம் – 6

### முன்னுரை

1. கர்த்தருடைய பந்தியானது, நாம் தேவனோடும், ஒவ்வொருவரோடும் ஒருமனப்பட்டு, நெருங்கி வரும்படியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
2. ஒருவனுடைய பக்தியை தேவனுக்கு வெளிப்படுத்தும்படியான ஒரு சந்தர்ப்பம்.
3. கர்த்தருடைய பந்தியானது, இயேசுவின் சரீரத்தையும், இரத்தத்தையும் நினைவுகூரும் ஒன்றாகும்.

### விவாதம்

## I *கர்த்தருடைய பந்தியின் ஆரம்பம்*

**A. *யாரால் ஆரம்பிக்கப்பட்டது ?***

1. மத். 26:17-30
2. மற்றும் மாற் 14:12-25; லூக் 22:7-30; I.கொரி. 11:17-34.

**B. *எங்கே பங்குபெற வேண்டும் ?***

1. லூக் 22:29-30
2. மத். 26:26-30
3. "என் பிதாவின் இராஜ்ஜியத்தில்"

**C. *யார் பங்குபெற வேண்டும் ?***

1. யோவா 3:3-5
2. இராஜ்ஜியத்தில் பங்குபெற வேண்டுமென்றால், இராஜ்யத்தின் பிரஜைகள் மட்டும்தான் பங்கு பெற வேண்டும்.

**D. *முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள், கர்த்தரின் பந்தி சம்பந்தமாக என்னத்தைப் புரிந்து கொண்டார்கள் ?***

1. அப் 20:7
2. ஒவ்வொரு வாரத்தின் முதல்நாளிலும் பங்குபெறவேண்டும்..
   a. எபி 10:25
   b. பரிசுத்தவான்களுடன் சபையாக கூடி வராமலிருப்பவர்களுக்கு அவர்களுடைய சௌகரியத்திற்கேற்ப இதை கொடுக்கக்கூடாது.
   c. சபையாகக கூடிவராத சந்தர்பங்களில் இதில் பங்கு பெறக்கூடாது.

## II *பந்தியின் முக்கியத்துவம்:*

**A. பாவத்திலிருந்து நாம் விடுதலைபெற்றதை நினைவுகூரும்படியாக**

1. I கொரி 11:26
2. ரோமர் 4:25

**B. இயேசுவின் ஞாபகார்த்தமாக ஏற்படுத்தப்பட்ட ஒரு நினைவுகூருதல் (I. கொரி 11:24)**

1. அம்மகத்தான மனிதரின் நினைவாக
2. அம்மகத்தான செயலின் நினைவுகூருதாலாக (எனக்காக அவரின் தியாகம்)

**C. இயேசுவில் நான் விசுவாசம் வைக்கிறேன் என்பதின் ஓர் அறிவிப்பு (I கொரி 11:26)**

**D. இது ஒரு எதிர்பார்க்குதல் நமது இரட்சகரின் இரண்டாம் வருகையை ஆவலோடு எதிர்பார்த்தல். (I கொரி 11:26, வெளி 22:20, "கர்த்தராகிய இயேசுவே வாரும்")**

**E. இந்த நினைவு கூருதலில் நான் தவறிவிட்டால், நான் என்னைப்பற்றி மற்றவர்களுக்கு என்ன சொல்லுகிறேன் ?**

1. இயேசு என்ன போதிக்கிறார் என்பதை நான் விசுவாசிக்கவில்லை என்று அறிவிக்கிறேன்
2. இயேசுவைக் காட்டிலும் எனக்கு வேறு ஏதோ ஒன்று முக்கியமாக இருக்கிறது என்று அறிவிக்கிறேன்.
3. நான் "முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தை தேடவில்லை" என்பதை உலகுக்கு அறிக்கையிடுகிறேன்.

**F. இது ஒரு பரிசோதனை**

1. I கொரி 11:27-32
2. பாத்திரவானாக பங்கு பெறுதல் (27)
3. சமாதானத்தோடும், ஒற்றுமையோடும் கடைபிடித்தல் (I. கொரி 10:17

## III *கர்த்தருடைய பந்தியின் திட்டம்*

**A. ஆராதனையின் இந்தப் பங்கிற்கான நமது மனோநிலை எப்படியிருக்க வேண்டும் ? (I. கொரி 11 :26-32)**

**B. I கொரி 11:26 - எதிர்பார்க்குதலோடு ...." நான் வரும் வரை"**

**C. I கொரி 11:27 - தகுதியுள்ளவர்களாக**

**D. I கொரி 11:28 - நம்மைச் சோதித்தறிகிறவர்களாக (மற்றவர்களையல்ல)**

**E. I கொரி 11:29. "கர்த்தருடைய சரீரத்தை நிதானித்து அறிகிறவர்களாக"**

1. இயேசு தனது சரீரத்தைக் கொண்டு நமக்காக என்ன செய்தார் என்பதை நினைவு கூருதல் (ஏசா . 53 : 8)
2. இயேசு தனது இரத்தத்தைச் சிந்தியதால், நமக்கு என்ன கிடைத்தது என்பதை நினைவு கூருதல்.

## IV *கர்த்தருடைய பந்தியை கடைபிடிக்க வேண்டிய நாளும், எவ்வளவு நாளுக்கொருமுறை என்பதும்.*

**A. அப் 20:7 (வாரத்தின் முதல்நாள்)**

**B. வருடத்திற்கு மொத்தம் 52 வாரங்கள், ஆகையால், 52 வாரத்தின் முதல் நாள்கள்**

**C. அப். 2- வாரத்தின் முதல் நாளிலே சபையானது ஆரம்பிக்கப்பட்டது.**

**D. வாரத்தின் முதல்நாளிலே கர்த்தர் உயிர்த்தெழுந்தார்.**

1. லூக் 24:1; மாற்கு 16:1 மத். 28:1
2. கர்த்தருடைய பந்தியானது அவருடைய மரணம் அடக்கம், உயிர்த்தெழுதல், ஆகிய இவைகளின் நினைவு கூருதலாகும்.

**E எவ்வளவு நாளுக்கொருமுறை**

1. ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும்
2. அப் 20:7-ஐ கவனிக்கவும்
3. வருடத்திற்கு 52 வாரங்கள் என்பது, வருடத்திற்கு 52 வாரத்தின் முதல் நாள்கள் என்பதாகும்.

## V *கர்த்தரின் பந்திக்குத் தேவையானவை*

**A** ***பஸ்கா பண்டிகையின் அப்பம் புளிப்பில்லாததாக இருந்தது (உப ா. 16:1-8) பஸ்கா பண்டிகையின்போது, கர்த்தர், கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்தினார். (மத் 26:26-29) புளிப்பில்லாத அப்பம், நாம் நினைவுகூருகிற நமது இரட்சகரின் தூய்மைக்கு அடையாளமாக உள்ளது. அது அவருடைய சரீரத்தை அடையாளப்படுத்துகிறது.***

**B** ***திராட்சை பழரசம் மனுக்குலத்துக்காக சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தை அடையாளப்படுத்துகிறது. அது திராட்சை பழரசமாக இருக்கவேண்டுமே தவிர, போதை ஏற்படுத்துகிற ஒன்றாக இருக்கக் கூடாது. அது பழரசமாக இருக்க வேண்டும்.***

**முடிவுரை**

1. ஆராதனையின் ஒரு பங்காக கர்த்தரின் பந்தி இருக்கவேண்டும் அப் 2:42ல் இதை நாம் காணலாம்.
2. எபி 10:25 ஐ வாசியுங்கள்
3. I. கொரி 11:20 மற்றும் 14:26-ஐ வாசித்து, இதில் கலந்து கொள்ளாத போது, ஒருவன் எதை தவறவிடுகிறான் என்று பாருங்கள்.

Toney. L. Smith

டோனி ஸ்மித்

# வெளிப்படுத்தின விசேஷம்

## பின்னணி – பாகம் –4

வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய பின்னணி சம்பந்தமாக இந்தக் கட்டுரை நான்காவதாகும். இந்நூலை தவறாகப் படித்து புரிந்து கொண்டதால் வந்த சில முக்கியமான கொள்கை தவறுகளை பற்றி நாம் தொடர்ந்து படிக்க உள்ளோம். கடந்த மாதம் "ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கை" பற்றி அலசிப் படித்தோம். இக்கட்டுரை, "யெகோவா சாட்சி" பிரிவினை சபையார், வெளிப்படுத்துதல் நூலை தவறாகப் புரிந்து கொண்டதால் நேர்ந்த தவறான உபதேசங்கள் பற்றியது. இந்த யெகோவா சாட்சி பிரிவினை சபையாரின் இந்த தவறான உபதேசங்களை அலசி ஆராய்ந்து பார்ப்பதற்கு குறைந்தது, இரண்டு நல்ல காரணங்கள் உண்டு. 1. உலகம் முழுவதிலும் (இந்தியா உட்பட) மிக வேகமாக வளர்ந்து வருகிற பிரிவினை சபைகளில் இதுவும் ஒன்று. ஆகவே கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் இவர்களைப் பற்றி தெரிந்து கொண்டு இவர்களின் தவறான கொள்கைகளைப் வசனப் பூர்வமாக மறுத்துப் பேசுவதற்கு ஆயத்தமாக இருப்பது அவசியம். நாம் போன கட்டுரையில் பார்த்த "ஆயிர வருட அரசாட்சிக் கொள்கை" எப்படி அநேக பிரிவினை சபையாரால் தவறாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதோ, அதுபோல, இதுவும் ஒன்று. 2. எப்படி வெளிப்படுத்தல் நூலை தவறாகப் புரிந்து கொண்டதால், "ஆயிர வருட அரசாட்சிக் கொள்கை" வந்ததோ, அதைப் போல, இந்நூலை தவறாகப் புரிந்து கொள்வதால் என்ன நேரும் என்பதற்கு, யெகோவா சாட்சி" சபையாரும் ஒரு சான்று. மற்றவர்கள் செய்த தவறுகளிலிருந்து நாமும் அதுபோல் தவறு செய்துவிடக் கூடாது என்று கற்றுக்கொள்ளவேண்டும்.

1872-ஆம் ஆண்டு அமெரிக்க தேசத்தின் பென்சில்வானியா மாநிலத்திலுள்ள பிட்டிஸ்பர்க் என்ற இடத்தில் சார்லஸ் டாஸ் ரசல் **(Charle s Taze Russell)** என்பவரால், யெகோவா சாட்சி பிரிவினை சபை ஆரம்பிக்கப்பட்டது. அவ்வருடத்தில் இந்த ரசல் என்பவர் வேதாகமத்தை படிக்கும் ஒரு குழுவை ஏற்படுத்தி ஒரு சிறு நூலை வெளியிட்டார். அதில் 1874-ம் ஆண்டு கண்ணுக்குப் புலப்படாத அளவில் இயேசுகிறிஸ்து திரும்பி வருவார் என்றும், 1914-ம் ஆண்டு உலகத்தின் முடிவு இருக்கும் என்றும் எழுதியிருந்தது. அது ஜனங்களை வெகுவாக கவர்ந்த படியால், ரசலுக்கு பின்னால் ஒரு பெருங்கூட்டம் சேர்ந்து சீக்கிரத்தில் பிட்டிஸ்பர்க்கில் உள்ள ஒரு பிரிவினை சபைக்கு பாஸ்டராக ஆகிவிட்டார். பிறகு ரசல் அவர்கள் 1879-ம் ஆண்டு வாக்கில் "வாட்ச டவர்" **(Watch Tower)** என்ற பத்திரிக்கையை வெளியிட ஆரம்பித்தார். அதன் பிறகு 1884ம் ஆண்டு, **"Watch Tower Bible & Tracts Society"**

ஒன்றை நிறுவினார். இது தான் யெகோவா சாட்சிக் காரர்களின் சட்டப்பூர்வமான அதிகார மையமாக இன்றளவும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ரசலுடைய தீர்க்க தரிசனங்கள் அனைத்தும் பொய்த்துப்போன நிலையிலும் கூட இவருக்குப் பின் இவருடைய பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்கள் இப்பிரிவினை சபை உலகம் முழுவதும் பரவுவதை கவனமாக கண்காணித்துக் கொண்டனர். இன்றைக்கு இவர்கள் உலகெங்கிலுமுள்ள 200க்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 60 இலட்சம் அங்கத்தினர்களைக் கொண்டதாக வளர்ந்துள்ளனர். இந்தியாவில் 500 இடங்களிலுள்ள 20,000க்கு மேற்பட்ட அங்கத்தினர்களும் இதில் அடக்கம். அவர்கள் 6,000க்கும் அதிகமான மிஷினரிகளை பயிற்றுவித்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒவ்வொரு வீட்டின் கதவையும் தட்டி, தங்களுக்கு ஆட்களை சேர்ப்பதில் சுறுசுறுப்பாய் இயங்குகிறார்கள்.

'தி வாட்ச் டவர்' என்ற பத்திரிக்கையானது நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் அச்சாகி உலகெங்கிலும் ஒரு கோடிபிரதிக்கும் மேலாக விநியோகம் ஆகிறது. அதுபோக 1,920ம் ஆண்டு முதல் பிறவகை இலக்கியப் பிரதிகள் நூறு கோடிக்கு மேல், 176 மொழிகளில் வெளிவந்துள்ளது. அவர்களின் வைராக்கியம் மெச்சத் தகுந்தது. ஆனால் துக்கப் படவேண்டியது யாதெனில், அது அறிவுக்கேற்ற வைராக்கியமாக இல்லை (ரோமர் 10:1-3)

யெகோவா சாட்சிகாரர்கள் மற்ற பிரிவினைச் சபையாரைப் போலவே அநேக தவறான கொள்கைகளைக் கொண்டிருக்கிறார்கள். அவற்றுள் சிலகொள்கைகள் உண்மையாகவே தனித்துவம் வாய்ந்தவைகள். ஆனாலும் அவைகளில் வெளிப்படுத்தின விசேஷத்தோடு சம்பந்தமுடையவைகளை மாத்திரம் இங்கே காணப்போகிறோம். நாம் ஏற்கனவே கண்ட ஆயிர வருட அரசாட்சிக் கொள்கை பற்றி இவர்களும் போதிக்கிறார்கள். ஆனால், நாம் அதை ஏற்கனவே பார்த்துவிட்டபடியால், மீண்டும் அதை பார்க்கப் போவதில்லை. யெகோவா சாட்சிக்காரார்களின் கொள்கைகளில் விநோதமாக ஒன்று உள்ளது. அது 1,44,000 பேர் மாத்திரம் பரலோகம் செல்வர் என்பது. இக்கொள்கை வெளிப்படுத்தல் 7ம் அதிகாரம், மற்றும் 14ம் அதிகாரம் ஒன்று முதல் ஐந்து வசனங்களில் உள்ள வேதபகுதிகளை தவறாகப் புரிந்து கொண்டதால் வந்த வினை. இந்த வேத வசனப் பகுதியில் 1,44,000 என்ற எண் உள்ளது உண்மையே. ஆனால், அதை சொல்லர்த்த ரீதியில் எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்த எண்கள் இடம்பெறும் பகுதிகள் எல்லாம் உருவக முறையில் தான் உள்ளது என்பதை தெளிவாக அறியமுடியும். உதாரணமாக வெளிப்படுத்தல் 7:3,4, மற்றும் 14:1 ஆகிய வசனங்களில் இவர்களுடைய நெற்றிகளில் முத்திரைப் போடப்பட்டிருக்கிறது என்றுள்ளது. இன்னும் வெளிப்படுத்தல் 7ம் அதிகாரம் இந்த எண் இஸ்ரவேலின் 12 கோத்திரங்களில் இருந்தும், கோத்திரத்துக்கு 12,000 பேரை கொண்டது என்று சொல்கிறது. மேலும், வெளிப்படுத்தல் 14:4ல் இந்த

எண் ஸ்தீரிகளால் தங்களை கறைபடுத்திக்கொள்ளாத 1,44,000 பேர் என்று கூறுகிறது. ஒருவேளை, இந்த எண் 1,44,000 சொல் அர்த்தம் உடையதாக இருந்தால் நெற்றிகளில் முத்திரைப் போடப்படுவதும், இஸ்ரவேலின் 12 கோத்திரங்களைச் சேர்ந்த ஸ்தீரிகளால் தங்களை கறைப்படுத்திக் கொள்ளாதவர்கள் என்பதும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் சொல்லர்த்தம் உடையதாகவே இருக்கவேண்டும். அவர்கள் 1,44,000 என்ற எண்ணை மாத்திரம் சொல் அர்த்தத்தில் எடுத்துக் கொள்கிறார்கள். ஒரு பகுதியிலுள்ள ஒன்றை உருவக முறையிலும் மற்றொன்றை சொல்லர்த்த முறையிலும் எடுப்பது தவறானதாகும். பரலோகம் இஸ்ரவேலையும், ஸ்தீரிகளால் கறைபடியாத ஆண்களை மாத்திரமல்லாமல். அதற்கு அதிகமானவர்களையும் உள்ளடக்கக் கூடியது, என்ற, உண்மை நமக்குத் தெரியும். ஆகையால், 1,44,000 என்ற எண்களைக் கொடுக்கும் கணக்கு உருவக முறையிலானது என்பது வெளிப்படையகத் தெரிகிறது. ஆகவே அந்த எண்ணும் உருவக முறையில் ஆனதாகவே இருக்க வேண்டும். பரலோகம் என்பது சொல்லர்த்த முறையில் 1,44,000 பேரை மாத்திரம் கொள்ளக் கூடியது என்று நாம் அளவிடக் கூடாது. இரட்சிக்கப்படும்படியான வாய்ப்பை தேவன் 1,44,000 பேருக்கு மாத்திரம் கொடுக்காமல், ஒவ்வொருவருக்கும் கொடுக்கிறார் (யோவா. 3:16; தீத்து 2:14; வெளி.3:20;22:17)

1,44,000 பேர் என்ற இக்கொள்கை, யெகோவா சாட்சிகாரர்களால் அவர்களின் ஆரம்ப நாட்களில் முறைப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று; அச்சமயத்தில் அவர்கள் அனைவரும், இயேசு 1914-ல் திரும்பவருவார் என விசுவாசித்தனர். அதன்பிறகு 1914-ம் வருஷம் வந்து முடிந்தது. அவர்களின் அங்கத்தினர் கூட்டமும் விரைவாகப் பெருகி 1,44,000 த்தை தாண்டியபடியால், தங்களின் இந்த எண்ணிக்கைக் கொள்கையை மாற்ற வேண்டி வந்தது. இப்பொழுது, அவர்கள் வேறு வழியில்லாமல் 1,44,000 பேர் என்பது பரலோகத்தில் இருக்கப் போகும் மிகச் சிறந்த நீதிமான்களைக் குறிக்கிறதென்று போதிக்கின்றார்கள். இந்த எண்ணிக்கை போக மீந்திருக்கும் நீதிமான்களுக்கு புதுப்பிக்கப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்டு, நித்தியமான பூமியில், நித்திய வாழ்வளிக்கப்படுமென்று கூறுகின்றனர். ஆக, மொத்தத்தில், இவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களில் இரண்டு வகுப்பு இருக்குமென்று விசுவாசிக்கின்றனர். இன்னும் யெகோவா சாட்சிக்காரர்கள், துன்மார்க்கர்களுக்கு, ஆத்துமா, சரீர அழிவாகிய முழு அழிவு ஏற்பட்டுவிடுமென்றும் ஆகையால் நரகம் என்று ஒன்றுமில்லையென்றும்கூட கூறுகிறார்கள்). இக்கருத்தை வலியுறுத்துவற்காக அவர்கள், வெளி 7:1-8 வசனங்கள் பரலோகத்திலுள்ள 1,44,000 பேர் பற்றி பேசுகிறதென்றும், 9-10 வசனங்கள் பூமியில் என்றென்றும் வாழக்கூடிய திரளான கூட்டமாகிய ஜனங்களைக் குறித்து, கூறுகிறதென்றும் சொல்கின்றனர். இக்கொள்கையும் மிகத் தவறானதுதான். இக்குறிப்பிட்ட பகுதியில் சொல்லப்பட்டுள்ள 1,44,000 என்பதும் திரள் கூட்டமான ஜனங்கள் என்பதும் ஆகிய இரண்டும், பரலோகத்தில் இருப்பதாகக் குறிக்கிறதேயொழிய, இரண்டு வித்தியாசமான

இடங்களில் உள்ளவர்களை அல்ல. (வெளி 7:19-17) பரலோகத்திலுள் ள (வெளி 1:4, 4:2-10) சிங்காசனத்திற்கு [வெளி. 7:9]ல் உள்ள திரள் கூட்டமான ஜனங்களென்றுதான் உள்ளதே தவிர பூமியில் உள்ள சிங்காசனம் என்றில்லை. தேவனுடைய ஆலயத்திற்கு முன்பாக உள்ள திரள் கூட்டம், (வெளி 7:15) என்பது பரலோகத்தில் உள்ளதுதானே தவிர [வெளி 11:19] பூமியிலுள்ளதல்ல. மேலுமாக கிறிஸ்து மீண்டும் வரும்போது இப்பூமியானது அழிக்கப்படுமே ஒழிய புதுப்பிக்கப்பட்டு மகிமைப்படுத்தப்படாது. (கீழே கவனியுங்கள்) உண்மையில் 1,44,000 பேர் என்பதும் திரள்கூட்டமானது என்பதும் தேவனால் இரட்சிக்கப்பட்டு நித்தியமான பரலோகத்திலுள்ள எல்லோரையும் குறிக்கிறது. (வெளி 7:13-18)

யெகோவா சாட்சிக்காரர்கள் "புதிய வானம், புதிய பூமி" என்பது நாம் இருக்கும் இப்பூமியைக் குறிக்கிறதென்றும் (வெளி. 21:1-7). அந்த குறிப்பிட்ட 1,44,000 பேர்கள் தவிர, மீதியான அனைத்து நீதிமான்களுக்கும், இப்பூமி நித்திய வீடாக இருக்குமென்றும் போதிக்கின்றனர். ஆனால், தேவனுடைய வார்த்தையின்படி, இந்த பூமி நித்தியமானதாக இருக்க முடியாது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள் (2 கொரி 4:18) "நித்திய பூமி" என்பது தேவனுடைய வார்த்தைக்கு முற்றிலும் எதிரானது. இந்த பூமி அழிக்கப்படுமென்று தேவன் தெளிவாகக் கூறியுள்ளார். (மத். 5:12; 6:19-20;லூக் 10:20; யோவா. 14:1-4; 1.கொரி.15:24; பிலி 3:20; 1.பேதுரு 1:4;) பிரசங்கி நூலில் பூமியோ "என்றைக்கும்" நிலைத்திருக்கிறது (பிர 1:4) சங்கீதம் 104:5) என்பதின் பொருள் பூமியானது குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் இருக்குமென்பதுதானேயொழிய, நித்தியத்தன்மையுடையதென்பதல்ல. ("என்றைக்கும்" என்பதற்கு உள்ள எபிரேய பதத்தின் பொருள் இதுதான்).

யெகோவா சாட்சிக்காரர்கள், இயேசுக்கிறிஸ்துவைப் பற்றியும் தூஷணமான கருத்தை கொண்டுள்ளனர். மனிதர்களாகிய நம்மைப் போலவே, இயேசுவும் ஒரு சிருஷ்டிக்கப்பட்ட ஒருவர் என்று விசுவாசிக்கவும், போதிக்கவும் செய்கின்றனர். இயேசுவின் தெய்வீகத்தை அவர்கள் மறுதலிக்கின்றனர். இயேசுவும் சிருஷ்டிப்பின் ஒரு பங்குதான் என்ற கருத்தை வலியுறுத்துவதற்கு அவர்கள் காட்டும் வேதபகுதி வெளி 3:14 ஆகும். அவ்வசனம், இயேசு "தேவனடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர்" என்று கூறுகிறது. **ஆனால், இயேசு சிருஷ்டிப்பில் ஒரு பங்கோ அல்லது சிருஷ்டிக்கப்பட்டவரோ அல்ல. "அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது"**(மீகா 5:2) வெளிப்படுத்தல் 3:14-ல் "ஆதியும்" என்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிற கிரேக்க வார்த்தை "ஆர்கே" (Archay) என்பதாகும். இந்த இடத்தில், இவ்வார்த்தையின் பொருள், சிருஷ்டிப்பிற்கு செயல் காரணம் (Active cause) இயேசு என்பது. இதே பொருளையுடைய கிரேக்க வார்த்தையை வெளி.(2 2:13)-ல் காணலாம். அங்கே இயேசு நான் "ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்" என்று சொல்கிறார். "ஆதியும்" என்பதற்கு, உண்மையில் அவர் ஒரு ஆரம்ப கட்டம் உள்ளவராக இருந்தால்,

"அந்தமும்" என்பதற்கு அவருக்கு ஒரு முடிவு கட்டமும் இருக்கவேண்டும்! இது உண்மையானால், இயேசு, மனிதனைக்காட்டிலும் கீழ்நிலை உடையவராக இருப்பார். ஏனெனில் எந்த ஒரு மனிதனுக்கும் முடிவுகட்டம் என்று இல்லை. எல்லா மனிதரும் பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ நித்திய நித்தியமாக வாழவேண்டும். ஆகவே, அந்த வார்த்தை யெகோவா சாட்கிகாரர்கள் சொல்வதற்கு நேர்மாறாக, இயேசு நித்தியமானவர் என்று காட்டுகிறது.

வெளி 3-ம் அதிகாரப் பகுதியில், இயேசுவானவர், உலகத்தைப் படைத்து, ஆளுகைசெய்து கொண்டிருக்கும், ஆமென் என்பவராகிய தனது அதிகாரத்திற்கு, லவோதிக்கேயா சபையார் செவிமடுத்து, மனந்திரும்பவேண்டுமென்று கூறுகிறார். அங்கே, லவோதிக்கேயர்களைப் போலவே நானும் ஒருமனிதன் தான் என்று இயேசு கண்டிப்பாகக் கூறவில்லை. ஒருவேளை, இவரும் அவர்களைப்போல இருக்கிறார் என்பது உண்மையானால், அவர்கள் ஏன் அவருக்குச் செவிகொடுக்கவேண்டும்? இயேசுவானவர் தெய்வீகமுள்ளவர் என்று வேதாகமம் தெளிவாகச் சொல்லியிருக்கும் போது, அந்த உண்மையை சுற்றி வளைத்து மாற்றத்தேவையில்லை. அவர் தேவனாக அழைக்கப்பட்டுள்ளார். (யோவ 1:1,14) கர்த்தர் மோசேயுடன் சொன்னது போல, இயேசு தன்னைப் பற்றிக்குறிப்பிடும்போது "நான் இருக்கிறேன்" என்று கூறுகிறார். (யோவா 8:58; யாத் 3:14) "நம்முடைய சாயல்" தேவனுடைய "சொந்த சாயலை" ஒத்துள்ளது. இயேசுவும் தெய்வீகம் நிறைந்தவர் என்பதைக் காட்டுகிறது.ஆதி 1:26-27; யோவா 1:1-3) மீண்டும் "நாம்" என்பது "யெகோவாவைக்" குறிக்கிறது, அதன் பொருள் இயேசுவும் தெய்வீகமானவர் என்பது (ஆதி 11:7-8) பிதாவானவரே, இயேசுவை "தேவன்" என்று குறிப்பிடுகிறார். (சங் 45:6,7;எபி 1:8-9) மேலும், பிதா, இயேசுவை "உடனிருப்பவர்" என்று அழைக்கிறார். அதற்குப் பொருள் இயேசு தெய்வீகமுடையவர் என்பதாகத்தான் இருக்கமுடியும். (சக 13:7 ).

யெகோவா சாட்சிக்காரர்களின் ஆயிரவருட அரசாட்சிக் கொள்கையும், இப்பொழுது நாம் பார்த்த இக் கொள்கையும், வெளிப்படுத்தலை நாம் படிக்கும்போது நம்மை வழிநடத்தவேண்டிய, சில முக்கியமான கொள்கை கோட்பாடுகளை, மீறியிருக்கிறதென்பது வெளிப்படையாகத் தெரிகிறது. தேவன் உருவக முறையில் தெளிவாக வெளிப்படுத்தியுள்ள ஒன்றை சொல்அர்த்த முறையில் நாம் எடுத்துக்கொள்ளும்போது, என்ன நேருகிறதென்பதற்கு இது ஒரு மிகச்சிறந்த உதாரணம். அதுமாத்திரமல்ல, இந்த தவறான கொள்கைகள் வேறொரு உண்மையையும் நமக்குத் தெரிவிக்கிறது. அதாவது! தேவனுடைய வார்த்தைகளின் ஒரு பகுதியானது, அதே தேவனுடைய வார்த்தையின் வேறுபகுதிகளோடு முரண்படும்படியான ஒரு பொருளை கொடுக்கிறதென்று சொல்லும் போது, கொள்கை ரீதியான பொருட் தவறு கண்டிப்பாக ஏற்படும். வெளிப்படுத்துதல் நூல் என்ன பொருளைக் கொடுக்கிறதோ, அவை, தேவனுடைய மற்ற வார்த்தைகளோடு கண்டிப்பாக ஒத்து வரவேண்டும்.

வெளிப்படுத்துதல் நூலை தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவாக வந்த வேறொரு கொள்கைத் தவறாகிய "கி.பி. 70க் கொள்கை" பற்றி அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

***ஜான் மேக்கன்*** **Jon Macon**

வாலிபர் பகுதி

# "எட்டிறல் அரியணை எட்டியவன்"

சமாதான கர்த்தரும் சாரோனின் ரோஜாவும், ஆதியும் அந்தமுமா யிருக்கிறேன் என்ற ஆத்துமநேசருமாகிய இயேசு கிறிஸ்துவின் மாசற்ற மதுர நாமத்தினால், இத்தரணியின் வாழ்வில், பலங்கொண்டு உயரப்பறக்கும் கானகத்து கழுகுகளைப் போல், தங்கள் எண்ணங்களிலும், கருத்துக்களிலும் உயர்ந்திருக்க வேண்டுமென ஆசை கொண்டிருக்கும் இளைய சமுதாய த்திற்கு கனிவான வாழ்த்துக்கள். தாலந்துகளை புதையலாக பெற்றிரு ப்பதால், தக்க தருணங்கிடைத்தால் மிளிர்வோமே என ஏங்கித்தவித்துக் கொண்டிருக்கும் நீங்கள், இந்த போட்டி நிறைந்த உலகத்தில், சந்தர்ப்பம் கிடைத்தால் அதைச் சரியான முறையில் சாதகப்படுத்தி சாதிக்க வேண்டு மென முயல்வீர்! இந்த இனிய பிராயத்தில் பட்டை தீட்டிய வைரமென தேவனுக்காய் நீங்கள் ஒளிர வேண்டுமென்பதே அடியானின் அளவில்லா ஆசை.

ஞானப் பெட்டகமாகிய நீதிமொழிகளில் உன்னப்பாடா கனாகிய சாலொமோன் விளம்புகையில், "நீதியையும், தயையையும் பின்பற்று கிறவன் ஜீவனையும், நீதியையும், மகிமையையும் கண்டடைவான்" (நீதி 21:21) என்று இளைஞர்களாகிய நாம் எதைப் பின்பற்ற வேண்டுமென்பதில் அதி அக்கறையுள்ளவராய் "நீதியையும், தயையையும்" நமக்கு முன் வைக்கிறார். அவர் சொல்லும் வேத அறிவுரையைக் கேட்டு நடந்தால், **"ஜீவன், மகிமை"** ஆகிய விலைமதிப்பற்ற வெகுமதிகள் கிடைக்கும் என்றும் நவில்கின்றார். ஆதியிலே வார்த்தையாயிருந்த "இயேசு கிறிஸ்து" வான்முகில் மீதேறி நியாயந்தீர்க்க வருகையில், நாம் நித்திய ஜீவனை அடையவேண்டும் என்பதற் காய், தனது எட்டாவது வயதில் அரியணையை எட்டியவனும், தனது ஆளுகையின் எட்டாவது வருடத்தில் தேவனை உண்மையாய் தேடித் தொழவேண்டும் என்பதற்காய் அவரின் அரியணையை எட்டியவனுமாகிய **கொற்றவன் "யோசியாவை"** இந்த வருடத்தின் எட்டாவது மாதத்தில் உங்கள் ஆழ்ந்த ஆய்வுக்காக முன் நிறுத்துகிறேன்.

### காரிய சமர்த்தனான தாவீதின் வழிகளில் நடந்தான்:

கானான் தேசத்தை சுதந்திரமாய் வாக்குமாறாத தேவனிடமிருந்து பெற்ற இஸ்ரவேலர்கள் நியாயப்பிரமாணத்தின் நீதியிலிருந்து தவறி, நெடுந்தூரம் விலகி போனபோதெல்லாம் அவர்கள்,

தேவனற்றவர்களுக்கு சேவை புரிந்து வந்தனர். ஒடுக்கப்பட்டோர்களின் குரல் இறைவனை எட்டிய பொழுதெல்லாம் அவர், நியாயாதிபதிகளை எழும்பச் செய்து விடுதலை ஈந்து வந்தார். பின்பு இஸ்ரவேலர்களின் விருப்பத்திற்கிணங்க நாட்டில் மன்னராட்சி மலர்ந்தது. செங்கோல் செலுத்திய வரிசையில், இரண்டாவதாக கெம்பீரித்து நிற்பவன், சிவந்தமேனியும், அழகிய கண்களும், நல்ல ரூபமும் கொண்டவனாகிய தாவீது. (1 சாமு 16 :12) இவன் குலத்து வரிசையில் வந்தவன்தான் நமது கட்டுரையை அலங்கரிக்கும் யோசியா என்பவன்.

புள்ளிமான்போல் துள்ளி விளையாடிட வேண்டிய வயதில் அரியணை ஏறிய இவன், பிளவுபட்ட இராஜ்யத்தின் ஒரு பிரிவாகிய யூதாவின் பதினாறாவது அரசன். இவன் தனது பதினாறாவது வயதில், அதாவது தனது இராஜ்யபாரத்தின் எட்டாம் வருடத்தில், தான் இன்னும் இளவயதா யிருக்கையில், தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத் தேட ஆரம்பித்தான். (2 நாளா 34:3) இளைஞர்களே! இந்த வாலிப அரசன் எடுத்த அறிவான முடிவைக் கவனித்தீர்களா? இன்னும் சில காரியங்களைப் பார்த்தால் உங்களுக்கு உண்மை புலப்படும்.

இறைவனின் கட்டளைகளிலிருந்து இம்மியும் விலகாமல் நடந்த தாசனாகிய தாவீதைப் பற்றி வேதாகமம் பறைசாற்றுவதைப் பாருங்கள்! "...என் கற்பனைகளைக் கைக்கொண்டு, என் பார்வைக்குச் செம்மையானதையே செய்ய, தன் முழு இருதயத்தோடும் என்னைப் பின்பற்றின என் தாசனாகிய தாவீது..." (2 இராஜா 14:8) தேவனே மெச்சக்கூடிய இப்படிப்பட்ட இராஜாவை முன்மாதிரியாகவும் உதாரணமாகவும் கொண்டு நடந்தான் இந்த இளவேந்தன். அனுபவம் இல்லை என்றபோதிலும் அனுபவமிக்கோர் நடந்த நல்வழியில் செல்லவேண்டும் என்பதை அறிந்தவனாய் இருந்தான்.

"....பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்...." (எரே 6:16) என்ற வசனத்திற்கு இவனே சிறந்த சான்று. நாமும் இந்த இளவயதில், ஒரு முடிவு எடுக்கும்முன் அல்லது ஒரு செயலைச் செய்யும்முன், இதற்குமுன் இதைசெய்தவர்களின் பாதையை அறிந்து, சிறந்த முடிவு எடுக்கவேண்டும். யோசியா தரும் மற்றொரு யோசனை என்னவென்றால் நமது முன்மாதிரிகள் நல்வழி நடந்தவர்களாயிருப்பது சாலச் சிறந்ததாய் இருக்கும் என்பதுதான். இவனுக்கு முன்மாதிரியாய் திகழ்ந்த தாவீதைக் குறித்த மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால், இவன் தன் தகப்பனாகிய ஈசாய்க்கு எட்டாவது

பிள்ளையாக (1.சாமு 16:10,11;17:12-14) பிறந்து, பின் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு அரியணையேறினான். அவனை பின்பற்றிய யோசியா தனது எட்டாவது வயதில் ஆட்சி பீடமேறினான். என்ன ஒரு ஒப்புமை பாருங்கள்!!

***உன்னதரோடு உடன்படிக்கை செய்து ஊக்கமாய் அதை செயல் படுத்தினான்:***

யோசியா, கர்த்தர் மேல் கொண்ட பக்தியால், பாசத்தால் அவருடைய ஆலயத்தின் பழுதை நீக்கி, அதை அலங்காரமாய் பேணிப்பாதுகாக்க வேண்டுமென்று எண்ணி அதற்குரிய உத்தரவுகளை பிறப்பித்தான். இதை தன் ஆளுகையின் பதினெட்டாவது வருடத்தில், பக்குவமாய் பரமனின் மீது பற்று கொண்டதால், பரிவோடு செய்தான். சிங்காசனமும், சிங்காரவனமும், சிற்றின்பம் தரும் சுகபோகமும், சுற்றி தனக்கு இருந்தபோதிலும், சாதுர்யம் நிறைந்த இவ்விளைஞன் கர்த்தரின் வார்த்தைகளே இம்மையிலும், மறுமையிலும் சுகமும் சுதந்திரமும் தரும் என அறிந்து அறுதியாய் பற்றிக்கொண்டான்.

கூழாங்கற்களைக் கொண்டு, இஸ்ரவேலின் தேவனுக்கெதிராய் கூக்குரலிட்டு கொக்கரித்த கோலி யாத்தைக் கதிகலங்கச் செய்த தாவீது தனது சங்கீதத்தில், “கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர் களிடத்தில் இருக்கிறது: அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்” (சங். 25:14) என்கிறான். இந்த வாக்கிற்கேற்ப நியாயப்பிரமாணத்தை, ஆலயத்தை பழுதுபார்த்த வேளையில் தேவன், பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவின் கண்களில் தென்படச் செய்தார். (2 இராஜ 22:8) தேவனின் வார்த்தைகள் மீது அளவற்ற ஆவல் கொண்ட இவன் அதை வாசிக்கக்கேட்டபோது, வஸ்திரத்தைக் கிழித்து தேவனுக்கு முன் தன் தாழ்மையை வெளிப்படுத்தினான். அத்தோடு நிறுத்தாமல், “கர்த்தரை பின்பற்றி நடக்கவும் அவருடைய கற்பனைகளையும், அவருடைய சாட்சிகளையும், அவருடைய கட்டளைகளையும், முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் கைக்கொள்ளவும், அந்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற அந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றவும் கர்த்தருடைய சந்நிதியில் உடன் படிக்கைபண்ணினான்....” (2 இராஜ 23:3)

இளைஞர்களாகிய நாம் இந்த இருபத்தாறு வயது இளம் அரசனிடமிருந்து கற்றுக்கொள்ளும் பாடம் என்னவென்றால், தேவனின் வேலைகள் பழுதாய் இருப்பதை பார்த்துக் கொண்டு இருக்கக்கூடாது. அவர் மீது பக்திகொண்ட நாம் அவருடைய வேலைகளை சீராய் செய்ய வேண்டும். இன்றைய இளைஞர்களிடம் வேதம் வாசித்தீர்களா? என்று கேட்டால் வேதாளத்தை பார்ப்பதுபோல் பார்த்து விட்டு “படித்தாலும் புரியவில்லை” என்று புத்திசாலித் தனமாய் பதில் தருவர். யோசியா தான் இளைஞனாய் இருந்த

போதும் வேதத்தை வாசித்ததைக் கேட்டு, அதைப் புரிந்துகொண்டு, உடன்படிக்கை செய்து, அதைத் தீவிரமாய் நிறைவேற்றினான். கரிசனை கொண்டு கர்த்தரின் கட்டளைகளை தியானித்தால் நிச்சயமாய் நமக்கும் புரியும் என்பதில் சந்தேகமில்லை.

சில சிறந்த பிரசங்கங்களை கேட்கும்போது, தங்களுடைய சீர்கேடான பழக்கங்களுக்காய் வருந்தி, நாங்கள் இப்படி இனி செய்வதில்லை என தங்களுடைய மனதில் தேவனோடு ஒப்பந்தம் செய்வார்கள் பலர். ஆனால் இவர்களின் இப்படிப்பட்ட ஒப்பந்தம், ஓட்டப்பந்தயத்தில் ஓடுபவனைக் காட்டிலும் வேகமாய் இவர்களிடத் திலிருந்து ஓடிவிடும். ஆனால் இந்த அரசனைப் பார்த்தீர்களா! உடன்படிக்கை செய்ததோடு நிறுத்தாமல் விக்கிரகங்களையும், பாகால் தெய்வத்தை வணங்குபவர்களையும் தேசத்திலிருந்து அகற்றினான். இப்படி அவன் செய்கையில் ஒரு சாதனையையும் புரிந்தான் என்றே கூறலாம். என்ன சாதனை என்று கேட்கிறீர்களா? ஞானி என்ற அடைமொழியோடு நாம் அழைக்கும் சாலோமோன், மனைவிகளின் ஓயாத நச்சரிப்பால், மதிமயங்கி தேவனின் கட்டளையை மீறி விக்கிரகங்களை சேவித்தான், அவன் சேவித்த விக்கிரகங்களை இந்த இளைஞன் உடைத்து உருக்குலையச் செய்தான். ஞானி செய்த தவற்றை ஒரு இளைஞன் திருத்தினானா! இளைஞர்களே என்ன வியப்பு! உங்கள் சக்தி தேவனுக்காய் பயன்படும்போது எத்தனை வலிமை வாய்ந்ததாயிருக்கிறது பாருங்கள். (II இராஜ 23ம் அதிகாரம்) ஆகவே, இவனைப் போல நாமும் தேவனோடு உடன்படிக்கை செய்வதோடு நிறுத்தாமல், சாதிக்கிறவர்களாகவும், செயல்வீரர்களாகவும் இருப்போம்.

குதிரைகளுக்கும் இரதங்களுக்கும் பேர்போன எகிப்து தேசத்தில் கடைசி வாதையாகிய தலைப்பிள்ளை சங்காரத்திலிருந்து இஸ்ரவேலைக் காத்ததின் நினைவாக, "பஸ்கா பண்டிகையை" தலைமுறைதோறும் அனுசரிக்க வேண்டுமென தேவன் திட்டமாய் கட்டளையிட்டிருந்தார். (யாத் 12:14) ஆனால், இந்த மறதிமிகும் மனிதனோ மகிமையின் தேவனின் மாண்பை மறந்தவனாய் "பஸ்கா" வை தன் சிந்தனையிலிருந்து அகற்றினான். நன்றிமறந்த இந்த குணத்தைப் பார்த்து தேவன் எப்படி வேதனைப்பட்டிருப்பார் என்று சிறிது யோசித்துப் பாருங்கள். நியாயப்பிரமாணப் புத்தகத்தை வாசிக்கக் கேட்ட யோசியா, நியாயாதிபதிகள் நாட்கள் தொடங்கி, இவன் நாட்கள்வரை யாரும் அனுசரிக்காத விதத்தில், தேவனுக்கென்று தனது பதினெட்டாவது வருடத்தில் இந்த பஸ்காவை எருசலேமில் அனுசரித்தான் [II நாளா. 35:18] வாலிபர்களே! நாமும் கூட இவனைப்போல தேவனுடைய கட்டளையை மறந்தேபோகும் மனித இயல்பை மாற்றி, அவருக்கென்று அரிய சேவையை, தேவ ஊழியத்தை இந்த இளவயதில் பரமனுக்காய் பறந்தோடி செய்வோமாக!

**ஜே. பிக்கின்ஸ்**

# யெரொபெயாமின் பாவம்!

ஒன்றுபட்ட ராஜ்யம் பிரிந்த பின் இஸ்ரவேலின் (10 கோத்திரம் மீது) முதல் அரசனாய் இருந்தான். யெரொபெயாம்.

யெரொபெயாம் "தன் மனதிலே சிந்தித்து, யோசனைபண்ணி", தேவன் ஏற்படுத்தின ஆராதனையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஆராதனை ஒழுங்கை நியமித்து அதை பத்து கோத்திரங்களையும் ஏற்றுக் கொள்ளும்படி செய்தான். (1. இராஜ 12:25-33)இப்படி எண்ணி செயல்பட்டதால், யெரொபெயாம் "இஸ்ரவேலைப் பாவஞ் செய்யப் பண்ணியவன்" என்று குறிப்பிடப்படுகிறான்.(2 இராஜ 23:15).

நம் சொந்த எண்ணங்களின்படியான அல்லது மனித கற்பனையின்படியான, (தேவன் கட்டளையிடாத) ஆராதனை தேவனுடைய பார்வைக்கு அருவருப்பாகவே இருக்கிறது. யெரொபெயாம் ஆரம்பித்து செய்ததுபோல், இன்றும் பிரிவுசபையாரின் ஆராதனை முறைமையில் மனித கற்பனைகள் அடங்கியிருக்கிறது. உதாரணமாக, இசை கருவிகள் பயன்படுத்துவது, தூபம் காட்டுவது, பரிசுத்த தண்ணீரை பயன்படுத்துவது. இந்த புதிய கண்டுபிடித்தலில் ஒன்றுக்கும் புதிய ஏற்பாட்டிலே ஆதாரமில்லை. ஆம் ஒன்றுக்காகிலுமில்லை!

தேவனுடைய புத்தகம் மிகத் தெளிவாய் வாய்பாட்டை (பாடல்) மட்டும் தான் கிறிஸ்தவ ஆராதனைகளில் பயன்படுத்தும்படி தேவன் கட்டளையிட்டதாக கூறுகிறது. அப்போஸ்தலனான, பவுல் கூறுகையில் "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து, சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தணம்பண்ணி, "(எபே 5:18,19). மேலும் அவர் அதைப்பற்றி கொலோசே சபைக்கு எழுதுகையில்:- "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி " (கொலோ 3:16).

மேலும் வேதாகமம் கூறுவதாவது:

"நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம். (உபா 4:2).

தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர். அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே. கூட்டினால் அவர் உன்னைக் கடிந்து கொள்வார், நீ பொய்யனாவாய் (நீதி 30:5,6).

தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார். (யோவ 4:24).

வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும் அதை யெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் (கொலோ 3:17).

கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன் (2. யோவான் 9).

யெரொபெயாமின் துணிகரமான பாவம், அவன் வாழ்ந்து, செயல்பட்ட நாட்களைவிட இப்பொழுது மிகவும் பரந்துவிரிந்து காணப்படுகிறது.

சங்கீதக்காரனாகிய தாவீது கூறுகையில்:

"கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும், விரும்பப்பட்டத்தக்கதும், தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன். அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு. தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்;அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன் (சங் 19:7-13) ஆகவே, நாமும் யெரொபெயாமைப்போல நம் சுயபுத்தியினால் தேவனுடைய காரியங்களை பற்றி முடிவெடுக்காமல், வேத வசனம் என்ன கூறுகிறதோ அதையே செய்வோமாக!.

**G.F. Raines**

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN / ERD / WD / PP/5
Posted at Erode HPO on 20, AUG 99
AUG 99 THIRUMARAI AASAAN Regd. No. TN / ERD / 49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி, இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு."**சான்றிதழ்**" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**இயக்குநர்**
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ. எண். 27, காங்கயம் – 638 701.**

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM.

TO

PRINTED MATTER

BOOK-POST

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph:04257 - 20030.